க்ரைம் அல்டிமேட் ஸ்டார்

# பட்டுக்கோட்டை பிரபாகர்

# நாவல் ஸ்பெஷல்

ரூ.10/-





பட்டுக்கோட்டை பிரபாகர்

எ ழு தி ய

# இறுதியில் வெல்வோம்



## 1

சென்னையில் முக்கிய நரம்புகளில் ஒன்றான சென்ட்ரல் ஸ்டேஷன்.

தற்போதுதான் பருவத்திற்கு வந்த இளம் இரவு.

சோடியம் மஞ்சள் பூசிக் குளித்துக் கொண்டிருந்தன அழைக்க வந்த, அனுப்ப வந்த,கார்கள்.

டிரைவர்கள் ஆவேசமாக அரசியல் பேசிக் கொண்டிருந்தார்கள். மக்கள் பயணப் பதட்டத்துடன் நெளிந்து, வளைந்து, இடித்து சகலவிதமான ஜிம்னைஸ்டிக்ஸ் வித்தைகளும் புரிந்து தங்கள் பிளாட்பாரங்களுக்கு விரைந்து கொண்டிருந்தார்கள். டெலிவிஷனில் விளம்பரங்கள் மூளைச் சலவை செய்து கொண்டிருந்தன. பாலிமர் நாற்காலிகளில்காலி இடமின்றி அமர்ந்திருந்தார்கள் முன்னதாக வந்தவர்கள். அறிவிப்புகள் பதட்டம் சேர்த்துக் கொண்டிருந்தன.

ஜிப் வைத்த ஒரு லெதர் பையைத் தோளில் மாட்டியிருந்த பார்த்தசாரதி, நிதானமாக வெளியே வந்தான்.

டாக்ஸிகளும், ஆட்டோக்களும் இளிச்சவாயர்களைத் தேடிக் கொண்டிருந்தன. சாலையில் காட்டாற்று வெள்ளமென வாகனங்கள்.

பார்த்தசாரதி ஆட்டோக்களை நிராகரித்து ஜாக்கிரதையாக சாலையைக் கடந்து பஸ்ஸ்டாப் வந்து நின்று கொண்டான்.

பையின் சைடு பகுதியில் சொருகி வைத்திருந்த சிகரெட் பாக்கெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொள்ள. அருகில் நின்ற சல்வார் கமீஸ் இரண்டடி விலகி நின்றது. ஒரு பிச்சைக்காரக் கிழவன் வரிசையாகத் திட்டு வாங்கிக் கொண்டான்.

அருகில் காம்பௌண்ட் சுவரின் போஸ்டர்களில் யாருக்கோ பிடிக்காத ஒரு கதாநாயகன் முகத்தில் சாணி. பூ விற்றுக் கொண்டிருந்த பெண் கறுப்பாய், ஆனால் கவர்ச்சியாய் இருந்தாள். அவள் தலையில் பூ இல்லை.

பஸ் ஸ்டாப்பின் இரும்புக் கம்பத்தில் ஒரு காலை மடக்கி உதார் கொடுத்துக் கொண்டு ரசனையாகப் புகை பிடித்த பார்த்தசாரதி. கார்ட்ராய் பேண்ட்டும், ஜூஸான முழுக்கை காட்டன் சட்டையும் அணிந்திருந்தான். முகத்தில் அரை மாத தாடி. தலை கலைந்து, எண்ணெய் இல்லாமல் காற்றுப் பக்கமெல்லாம் சுலபமாகப் புரண்டு கொண்டிருந்தது.

தன் பஸ் வர, சிகரெட்டை ஷூவின் அடிப் பாகத்தில் நசுக்கி எறிந்து விட்டு, ஏறிக் கொண்டான்.

லஸ் கார்னரில் இறங்கிக் கொண்டான்.

ஒரு ஹோட்டல் வாசலில் பித்தளை தாம்பாளம் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த பீடாக் கடைக்காரனின் கேட்டான்.

"முராரி மேன்சன் எங்கே இருக்கு?"

வலது பக்க நேராய் போய், இடது பக்கம் திரும்பி என்றெல்லாம் அவன் சொல்லாமல், "அதோ தான் இருக்கே சார்" என்று சுட்டிக் காட்டிய கட்டிடம் மூன்று மாடிகளை வைத்திருந்தது.

நன்றி சொல்லி நடந்தான். நெருங்கினான்.

மேன்சனின் கிரவுண்ட் ஃப்ளோரில் வரிசையாகக் கடைகள், எலெக்ட்ரிகல்ஸ் ஸ்டோர்ஸ், பேக்கரி வைன்ஷாப், லெண்டிங் லைப்ரரி, ஐஸ் கிரீம்ஸ், ரெடிமேட்ஸ் பழக்கடை, தப்பாமல் ஒரு ஜெராக்ஸ்.

மாடிக்குச் செல்ல படிகள் எங்கே என்று விசாரித்துதான் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

படிகளில் வெளிச்சம் காட்டிய பலவீன 25 வாட்ஸ் சுற்றி, எட்டுக்கால் பூச்சிகளின் வலைக்



கோட்டைகள். சைடு சுவரெல்லாம் வெற்றிலை போட்டுத் துப்பியிருந்தார்கள். படிகளில் காபியோ, டீயோ சிந்தி ஈக்களின் மாநாடு.

முதல் ஃப்ளோரில் சாலை பார்த்த முதல் அறை சலவை நிலையமாக இயங்கிக் கொண்டிருந்தது. மூக்குக் குத்தின ஒல்லியான பெண் சினிமா இதழ் படித்துக் கொண்டிருக்க, ஒரு ஆசாமி இஸ்திரி போட்டுக் கொண்டிருந்தான்.

"பதினேழாம் நம்பர் ரூம்.." என்று பொதுவாகக் கேட்டான்.

"அடுத்த சைடுல சார்" என்றுவிட்டு, தேவைக் கதிகமாய் ஒரு மைக்ரோ செகண்ட்கூட வீணடிக்காமல் அவள் நமிதாவின் அடுத்த படத்தைப் பற்றியச் செய்தியைப் படிக்க ஆரம்பித்தாள்.

அடுத்த விங்கில் வாசல் நிலைகளின் மேல் 11,12,13 என்று எண் பார்த்துக் கொண்டே நடந்தான்.

ஒரு அறையில் இருந்து ஹார்மோனியம் வந்தது. மற்றொன்றில் விஸ்கி வாசனை வந்தது. இன்னொன்றில் ஊதுபத்தி, அப்புறம் சென்னை பிறகு "சீக்கிரம் சீட்டைப் போடேண்டா!"

17ன் கதவில் தொத்தலாய் ஒரு பூட்டு. கூடவே சொருகின ஒரு சீட்டு. எடுத்துப் பிரித்தான்.

"குளிக்கப் போயிருக்கிறேன். காத்திருக்கவும் - மாரிமுத்து"

பார்த்தசாரதி தோள்பையைக் கீழே வைத்து விட்டு மற்றொரு சிகரெட் கொளுத்திக் கொண்டான்.

இதற்கும் அடுத்த கட்டிடம் ஒரு ஹோட்டல். இங்கிருந்து திறந்த ஜன்னல்கள் வழியாக மேஜை மேஜையாகச் சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்களைப் பார்க்க முடிந்தது. உரு குஜராத்தி பெண் நிலைக்

கண்ணாடி மாற்றிக் காட்டியது போல, முந்தானையை இடதிருந்து வலமாகப் போட்டுக் கொண்டு. இடுப்பு சதை அதிரகை கழுவ நடந்தாள். வெங்காய சாம்பார் காற்றில் வந்தது.

சிகரெட் முடியும், முன்பாகவே இடுப்பில் ஈரத் துண்டும். பிளாஸ்டிக் பக்கெட் நிறைய துவைத்த துணிகளுமாக வந்தான் மாரிமுத்து.

"வாப்பா, வந்து நேரமாச்சா?"

சோப்பு டப்பாவுக்குள்ளிருந்து சாவி எடுத்துத் திறந்தான்.

"இல்லை. இப்பத்தான் வந்தேன்."

இரட்டைக் கதவுகளைத் தள்ளி கோணிச் சாக்கில் கால் ஈரம் துடைத்துக் கொண்டு உள்ளே வந்து லைட்டைப் போட்டான் மாரிமுத்து.

"ஆபீஸ்ல புறப்பட லேட்டாய்டுச்சி. இல்லைன்னை ஸ்டேஷனுக்கே வந்திருப்பேன்."

ஒற்றைக் கட்டில் ஓங்கிக் குத்தினால் உடைந்து விடும் மேஜை, ஸ்டூல். மண் ஜக்கின் தலையில் கவிழ்த்த எவர் சில்வர் டம்ளர். குறுக்கே கட்டின நைலான் கொடிகள் மட்டையோடு தோணிவ், மைக்கோடு ஜாக்ஸன், கொட்டுகிற காசுகளோடு லக்ஷ்மி. எலிமினேட்டர் பொருத்திய பாக்கெட் ரேடியோ, கோணல் மாணலாக அடுக்கப்பட்ட ஷூஸாக்ஸ், செருப்புகள் பிரஷ், பாலீஷ் டப்பா. மூலையில் சார்த்தின வார்கோல்.

"பரவால்லை, எப்படி இருக்கே? இன்னும் கொஞ்சம் வசதியா ரூம் பாத்திருக்கக் கூடாதா?"

"இது ஆபீசுக்குப் பக்கம். ரெண்டு நிமிஷத் துக்கு ஒரு பஸ். பக்கத்திலேயே ஹோட்டல், இதை யெல்லாம் பார்க்க வேண்டியிருக்கே உக்காரு."

மாரிமுத்து பக்கெட்டில் இருந்து துணிகளை எடுத்து ஒவ்வொன்றாய் உதறி கொடியில் போட்



டான். பார்த்தசாரதி கட்டிலில் அமர்ந்து கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த புத்தகத்தைக் கையில் எடுத்துப் பார்த்தான். மாரிமுத்து லுங்கி அணிந்து, பனியன் அணிந்து தலை சீவி, முகம் கழுத்தெல்லாம் பவுடர் போட்டுக் கொண்டு அவன் எதிரில் ஸ்டூலில் அமர்ந்து, "சொல்லு, லெட்டர்ல விபரம் எழுதலை நீ டெல்லில என்ன செஞ்சிக்கிட்டிருந்தே? ஏன் பிடிக்கலை? எதுக்கு மெட்ராஸ் வந்தே? இங்கே என்ன செய்யப் போறே? குளிச்சிட்றியா முதல்ல?"

"வேணாம். ரூமுக்குள்ளே சிகரெட் குடிக்க லாமா?"

"தாராளமான" குப்பைத் தொட்டி எடுத்து அருகில் வைத்து, "ஆஷ்ட்ரே இல்லை, இதிலே தட்டிக்கோ நாம பார்த்து எழெட்டு வருஷம் இருக்காது?"

"இருக்கும் மேலேயே இருக்கும்."

"அப்பா அம்மால்லாம் எங்கே இருக்காங்க? எப்படி இருக்காங்க?"

"அப்பா இறந்துட்டார். அம்மா அண்ணனோட மங்களூர்ல இருக்காங்க. அவங்களைப் பார்த்தே நாலு வருஷ மாச்சி. மெட்ராஸ்ல படிப்பு முடிச்சி இங்கே வேலை கிடைக்காம, வீட்ல பிரச்னையாகி, சொல்லிக்காம டெல்லி போனவன்தான். அங்கேயும் சுகமில்லை. பத்து வேலையாவது பார்த்திருப்பேன். எதுவுமே நிரந்தரமில்லை. ஏராளமா அனுபவங்கள். பாசம்,நட்பு, பண்பு, நேர்மை இன்னும் இது மாதிரி அத்தனை நல்ல விஷயங்களும் பணத்துக்கு அப்புறம்தான்னு ரொம்ப தாமதமா புரிஞ்சிக்கிட்டு வந்திருக்கேன். இதைப் புரிஞ்சிக்க தலைநகர் போக வேண்டியதாய்டுச்சி பாரு."

"ரொம்ப விரக்தியாப் பேசறே சாரதி. இங்கே என்ன செய்யப் போறே?"

"பணம் சம்பாதிக்கப் போறேன் மாரிமுத்து. க்விக் மணி."

"அப்படின்னை?"

"அதெல்லாம் உனக்கு வேணாம். நான் தனியா ஒருரும் தேடிக்கிற வரைக்கும் உன்னோட தங்கிக்க அனுமதி கொடு போதும். சேர்ந்து படிச்சதுக்காக பழகின துக்காக இதைச் செய்யி. போதும்."

"சாரதி, நீ சொல்றது எனக்கு சரியா விளங் கலை. ஆனா தப்பான வழி எல்லாம் எதுவும் வேணாம். ஒரு நண்பனாச் சொல்றேன்."

"பணம் கிடைக்குதுன்னா எதுவுமே தப்பான வழி இல்லைப்பா. இதுதான் இப்போதைய சமூகக் கோட்பாடு. அலுக்க அலுக்க அறிவுரைகள் கேட்டுட் டேன். நீ வேற போரடிக்காதே. குளிக்கிறேனே... பாத்ருமுக்கு வழி காட்டு."

பார்த்தசாரதி பையில் இருந்து துண்டு எடுத்துக் கொண்டான். சட்டென்று பேச்சைக் கத்தரித்த அவனைக் கவலையாகப் பார்த்தான் மாரிமுத்து.

## 2

காங்கிரஸின் பீரோ என்று எதிர்கட்சிகளால் கிண்டல் செய்யப்படுகிற சி.பி.ஐ-யின் சென்னைப் பிரிவின் அலுவலகத்தில் பச்சையாக ஷேவ் செய் திருந்த உயர் அதிகாரி சிகப்பு போனில் பேசினார்.

"சொல்லுங்கள் சார்"

காகிதத்தின் மேல் பேனா தயாராக இருந்தது.

"ஷபீனா பேகம் என்று டிக்கெட் வாங்கப் பட்டிருக்கிறது."

"சரி சார்"

"விமானம் அங்கே இறங்கும் நேரம் மாலை 4.30"

"சரி சார்"

"கறுப்பு சுடிதார், பாப் செய்யப்பட்ட தலை, அடர்த்தியான சிகப்பில் லிப்ஸ்டிக். தோளில் ஒரு



[illegible] டை. கையில் சாம்பல் நிறத்தில் ஒரு ஸிப்பர்பேக் குறித்துக் கொண்டீர்களா?"

"யெஸ் சார்"

"டெல்லி விமான நிலையத்தில் இந்த நிமிடம் இவள் காத்திருக்கிறாள். கொஞ்சம் ஸ்ட்ராங்காகவே சந்தேகப்படுகிறோம். இங்கே மேம்போக்காக சோத னைகளை நடத்தி அவளை அனுமதிக்கச் சொல்லி யிருக்கிறோம். இனி உங்கள் பொறுப்பு. திறமையாகச் செயல்படுங்கள். தப்ப விட்டுவிட வேண்டாம்."

"சரி சார்"

"அவ்வப்போது தகவல் தாருங்கள்."

"சரி சார்"

போனை வைத்தார் சந்திரமேனன். ஆஷ்ட் ரேயின் குறுக்கே வைத்திருந்த சிகரெட்டைத் தொடர்ந்தார். நேரம் பார்த்துக் கொண்டார். டிராயரை இழுத்து டெலிபோன் எண்கள் குறித்த பிளாஸ்டிக் டைரி எடுத்தார். அதில் 'ம' என்ற எழுத்தை அழுத்த... அந்தப் பக்கம் திரும்பி நின்றது.

விரல்களை பெயர்களில் நடக்கவிட்டார்.

கிருஷ்ணன்..

கிருஷ்ணமூர்த்தி.

கண்ணன்.

கார்த்திக் கிஷோர்-விரல் நின்றது.

நேரெதில் எண்களைப் பாத்த்துக் கொண்டு டயல் செய்தார்.

"கிஷோர், கார் அனுப்பறேன். உடனே வா"

## 3

ரத்னா பாண்டியன் மணியடித்து பூஜை செய் தார். கண்களை மூடிக் கொண்டார். இரு கரம் கூப்பி

ணார். கற்பூரம் கொளுத்தி வெங்கடாஜல பதிக்குக் காட்டினார், வைத்தார். தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார். எழுந்தார். பூஜை அறையை விட்டு வெளியே வந்தார்.

ஹேங்கரில் மாட்டின வெள்ளை முழுக்கை சட்டையை வைத்துக் கொண்டு தயாராய் நின்றாள் மனைவி.

வாங்கி அணிந்து கொண்டார். பாலியெஸ்டர் வேஷ்டியை ஒரு முனை பிடித்துக் கொண்டு டைனிங் மேஜைக்கு வந்தார்.

"செல்வி எழுந்தாச்சா?"

"இன்னிக்கு காலேஜ் இல்லையாம். ரெண்டு தடவை எழுப்பிட்டேன். எழுந்திருக்க மாட்டேங்கறா."

"விடு. அவளா எந்திரிக்கட்டும்."

"வண்டி பெட்ரோல் போட்டு வந்துடிச்சி. மேனேஜர் ரெண்டு தடவை போன் செஞ்சார். வெங்கடேசன் வந்திட்டான்."

நிதானமாகச் சாப்பிட்டார். ரத்ன பாண்டியனுக்கு தலையின் இரண்டு பக்கங்களிலும் நரை கலந்திருந்தது. கோல்டு பிரேம் கண்ணாடிக்கு அடியில் உப்பலாக சதைகள். நடு தாடையில் சின்னப் பள்ளம். உதடு தெரிய கத்தரிக்கப்பட்ட மீசை. சற்று உயரமான கழுத்து. நெற்றியில் தீற்றலாகக் குங்குமம்.

ரத்ன பாண்டியன் கை துடைத்துக் கொண்டு முன் ஹால் வந்தார்.

பணம் பொழிந்து அலங்கரிக்கப்பட்ட ஹால்.

ஸோபாவில் வாக்வம் க்ளீனர் கொண்டு சுத்தம் செய்து கொண்டிருந்தவன் மரியாதையாக நகர்ந்து நின்று கொண்டான்.

வரவேற்பறைக்கு அருகில் சின்ன அலுவலக அறை இருக்க... அதன் வாசலில் பேப்பர் படித்துக்



கொண்டு நின்றிருந்த வெங்கடேசன் இவரைப் பார்த்ததும் பேப்பரை மடக்கிக் கொண்டான். "குட்மார்னிங் சார்"

வெங்கடேசன், ஐ.ஏ.எஸ். இண்டர்வியூவிற்குச் செல்பவன் போல சுத்தமாக, நளினமாக, மடிப்பு கலையாத உடைகளில் இருந்தான்.

ரத்ன பாண்டியன் அறைக்குள் வந்தார். அவன் அவரைத் தொடர்ந்தான். ஏ.சி.யைப் போட்டான். மேஜைக்கு அந்தப் பக்கம் உயர்தர நாற்காலியில் அமர்ந்து கொண்ட பின் "நேத்து ஒண்ணும் பிரச்னை இல்லையே?"

"இல்லை சார்."

"ஈயிலேத்தி வழியனுப்பினது யாரு?"

"ராஜதுரையை அனுப்பியிருந்தேன் சார்."

"போய்ச் சேர்ந்ததும் தகவல் வந்துடுச்சா?"

"தந்தி வந்திச்சி சார். ஒண்ணும் பிரச்னையில்லை?

"இன்ஸ்பெக்டரைப் பார்த்துட்டியா?"

"பார்த்துட்டேன் சார்"

"விட்லதானே?"

"ஆமாம்."

"எவ்வளவு?"

"இருபத்தஞ்சி. அப்படியும் ஆசை ஒரு டி.வி. கிடைக்குமான்னு கேட்டார்."

"கொண்டு போய் கொடுத்துடு"

"இல்லை, தேவையில்லை சார்"

"பரவால்லை, கொடுத்துடு இதெல்லாம் வயல்ல போடற உரம். உரம் போடப் போட விளைச்சல் நல்லா இருக்கும். மனம் கோணவே கூடாது. நமக்கு செஞ்சிக் கொடுத்திருக்கிறது பெரிய காரியம்."

ரத்ன பாண்டியன் போன் எடுத்து எண்கள் சுழற்றி "ஹலோ, நான் தான் பேசறேன். ஒரு நல்ல கலர் டி.வி.யா பார்த்து செக் பண்ணி வைங்க. நம்ம ஸ்டா∴ப் யார் பேர்லயாவது பில் போட்டுக்கங்க. வெங்கடேசன் வருவான், கொடுத்துடுங்க" என்று வைத்தார்.

"சரி சார். கொண்டு போய் கொடுத்துடறேன்."

போன் ஒலித்தது. எழுந்தார்.

"ஹலோ"

"சௌக்யமா?"

"என்ன ஷேட்டு, பத்து நாளா அட்ரசைக் காணோம்"

"கொஞ்சம் கெடுபிடி."

"டெல்லில உனக்குத் தெரியாத மேல் மட்டமா?"

"எதுக்கும் எச்சரிக்கை நல்லதுதானே?"

"அது சரிதான். என்ன, அனுப்பறியா?"

"ஆமாம்."

"என்னைக்கு?"

"இன்னைக்கு ∴ப்ளைட்ல."

"வர்றது யாரு?"

"உங்களுக்குத் தெரியும். லீலா."

"அந்தப் பொண்ணை? சரி."

"டிரைன்ல அனுப்பி வெச்சிடுங்க."

"முடிஞ்சா இன்னைக்கே அனுப்பறேன். இல்லைன்னா நாளைக்கு அனுப்பி வைக்கிறேன்."

"ரைட்டு. வந்து தங்கிக்கிட்டு போன் பண்ணச் சொல்றேன்"

"எவ்வளவு வேணும்?"

"ரெண்டு போதும்."



"ரொம்ப பயந்து சாவறேய்யா நீ"

"அப்படி இல்லை. என்னத்துக்கு ரிஸ்க்குன்னு தான்."

"சரி, நான் பார்த்துக்கறேன்."

ரத்ன பாண்டியன் போனை வைத்து விட்டு, "என்ன வெங்கடேசன், ரெண்டு இருக்குமா?"

"இல்லை சார், ஒன்னுதான் இருக்கு. நாளைக்குதான் அனுப்பி வைக்க முடியும்."

"சரி. அப்ப அதுக்கான ஏற்பாட்டைப் பாரு. போன் வந்தா சொல்லிடு. நாளைக்கு டிரைன் டிக்கெட் எடுத்துடு. வேற ஏதோ பேர் சொல்வான் கேட்டு நினைவிருக்கில்லே?"

"இருக்கு சார். ஷபீனா பேகம்!"

"அப்படியே டிக்கெட் எடுத்துடு. யார்கிட்டே பொறுப்பு தரப்போறே?"

"மேத்திவ் இருக்கான் சார்"

"புதுசப்பா அவன். சரியா செய்வானா?"

"செய்வான் சார்."

"சிகா இல்லாம கையொடிஞ்ச மாதிரி இருக்கு"

"சீக்கிரம் வந்துடுவான் சார். எல்லா ஏற்பாடும் தான் செஞ்சாச்சே."

"ரைட்டு ∴பைனான்ஸ் மீட்டிங் இருக்கு இன்னைக்கு போய்ட்டு வந்துடறேன். மேனேஜர் ரெண்டு தடவை போன் செஞ்சாராம். என்னன்னு கேளு. தெரிஞ்சிக் கிட்டுப் போறேன்."

வெங்கடேசன் போனில் பேசினான். வைத்தான்.

"மூணாவது ஷி∴ப்ட் உண்டான்னு கேட்டார் சார் உண்டுன்னுட்டேன்."

ரத்ன பாண்டியன் வெளி வந்து போர்ட்டிகோவுக்குவர.. டிரைவர் கதவைத் திறந்து விட்டான். ஏறி கொண்டதும் சாத்திவிட்டுத் தன் சீட்டில் அமர்ந்து ஸ்டார்ட் செய்தான்.

# 4

பார்த்தசாரதி தலை சீவிக் கொண்டிருந்தான்.

மாரிமுத்து வேஷ்டி அணிந்து கொண்டிருந்தான்.

"முத்து. உன்கிட்ட நாலாயிரம் இருக்குமா?"

"ஆயிரத்தி சொச்சம்தான் இருக்கு பேங்குல. தீபாவளி வருது. எதுக்கு உனக்கு அவ்வளவு பணம்?"

"மூலதனம் போடணும்."

"எதுக்கு?"

"முத்து. நான் ஒரு பிளான் பண்ணிக் கிட்டிருக்கேன், இது தனி மனிதத் திட்டம் துணைக்கு ஒரு ஆயுதம் அவசியம் வேணும். அதுக்குதான்."

"நாலாயிரத்துக்கு ஆயுதமா? அப்படி என்ன ஆயுதம்?"

"செகண்ட் ஹேண்ட்ல ஒரு ரிவால்வர். நாலாயிரம் விலை பேசி வச்சிருக்கேன் ஒரு பார்ட்டிகிட்டே."

"டேய்! விளையாடுறியா?"

"இல்லை. நிஜமாத்தான். என் திட்டத்துக்கு அவசியம் அது வேணும்."

"பார்த்தசாரதி, உன் போக்கு கொஞ்சமும் சரியில்லை."

"ஆமாம். சரியில்லை. எனக்கே தெரியும்."

"கண்ணியமா ஒரு வேலை தேடிக்கோ. இந்த கெட்ட எண்ணத்தையெல்லாம் விட்டுடு. நான் சொல்றதைக் கேளு."

"ஸாரி. ரொம்ப நாளா யோசிச்சி முடிவுக்கு வந்தாச்சி. இனிமே மாத்திக்க முடியாது. எனக்கு பணம் தான் குறிக்கோள். என்ன தப்பு வழிக்கு வேணாலும் போகத் தயார்."



"ஏண்டா இப்படி அலையறே?"

"முத்து. அந்தப் பணம் இல்லாததாலதானேடா ஒரு வருஷம் பழகிட்டு என்னைத் தூக்கி எறிஞ்சிட்டு அந்த என்ஜினியரைக் கட்டிக்கிட்டா அவ! அவ முன்னாடி கார்ல போய் இறங்கணும். உன் புருஷனை விட என்கிட்டே பத்து மடங்கு பணம் இருக்கு. இப்ப வர்றியாடி என்கூடன்னு கேக்கணும்."

"ஓகோ. இப்பதான் புரியுது. எல்லாத்துக்கும் பின்னால ஒரு பொண்ணு உண்டுங்கிறது சரியாத்தான் இருக்கு. காதல் தோல்வியில கொள்ளைக்காரனாகிறயாக்கும்."

"நீ எது வேணும்னாலும் சொல்லிக்க. நான் ஒரு லட்சியம் வெச்சிட்டேன். கட்டுக்கட்டா பணம் தர்றேன்னு சொல்லு. நீ சொல்ற ஆளைக் கொலை செஞ்சிட்டு வர்றேன். அவ்வளவுக்குத் தயாரா இருக்கேன்."

மாரிமுத்து திடுக்கிடலுடன் அவனைப் பார்த்தான்.

"நாலாயிரம் இருக்கா?"

"இல்லை."

"ரைட். நாலாயிரத்துக்காக ஒரு சின்ன ஏற்பாடு நான் செஞ்சிக்கிறேன்."

புறப்படப் போன பார்த்த சாரதியைக் கை நீட்டி தடுத்தான்.

"சொல்றேன்னு கோவிச்சுக்காதே."

"சொல்லு."

"நான் பார்த்த பழகின பழைய பார்த்தசாரதி இல்லை நீ."

"ஆமாம். இல்லை தான்."

"நான் அதே பார்த்தசாரதியா உன்னை நினைச்சித்தான் வரச் சொல்லி, என்னோட தங்க சொல்லி லெட்டர் போட்டேன். நீ ஏதோ விளையாட்டுக்குப் பேசறேன்னு நினைச்சா நிஜமாவே

என்னென்னவோப் பேசறே. எடுத்துச் சொல்லித் திருத்தற நிலைமையெல்லாம் தாண்டிட்டே. அதனால..."

"அதனால?"

"உனக்கும் எனக்கும் ஒத்து வராது. உன்னால எனக்கும் ஏதாச்சும் பிரச்சனை வந்தாலும் வரலாம்" என்ற மாரிமுத்து அவனுக்கு முதுகு காட்டி நின்று கொண்டு. "அதனால நீ எங்கேயோ போ. எப்படியோ இரு. என்னைத் தொந்தரவு செய்யாதே என் ரூமைக் காலி செஞ்சிடு."

சில விநாடிகள் மௌனம் காத்த பார்த்தசாரதி. "ஒக்கே. நீ எனக்கு உதவியா இருப்பேன்னு நினைச்சேன். பரவால்லை. ரெண்டு நாள் டைம் கொடு. நான் ஒரு ரூம் ஏற்பாடு செஞ்சிக்கிட்டு காலி பண்ணிடறேன். இந்த ரெண்டு நாள் மட்டும் என் தொந்தரவைப் பொறுத்துக்கோ" என்றான்.

புறப்பட்டான். முராரி மேன்சனை விட்டு வெளியே வந்தான். கடையில் சிகரெட் வாங்கி அங்கேயே ஒன்றைக் கொளுத்திக் கொண்டு நடந்தான். ஊனமுற்றோர் தொலைபேசி பூத்துக்கு வந்து உள்ளே சென்று பேசினான். வைத்தான். மீண்டும் நடந்தான்.

பிளாட்பாரக் கடையில் ரெக்ஸின் துணி விரித்து மேலே ஸ்க்ரு ட்ரைவர்கள், ஆயில்கேன்கள், பூட்டுகள், கத்தரிக்கோல்கள், கத்திகள் என்று பரப்பப்பட்டிருக்க...

ஒரு பட்டன் கத்தியை எடுத்து அழுத்தி விரித்துப் பார்த்தான். மீண்டும் மடக்கினான். என்ன விலை இது?

"இருபத்தஞ்சி ரூபா"

பேரம் பேசாமல் பணத்தைக் கொடுத்துப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். பஸ் பிடித்து மாம்பலம் வந்தான்.



தீபாவளிக் கொண்டாட துணி வாங்க மக்கள் நெருக்கியும் நெருங்கியடித்துக் கொண்டு இருந்தார்கள்.

பார்த்தசாரதி நிதானமாக இரண்டு பேண்ட் பாக்கெட்டுகளிலும் கைகளை நுழைத்துக் கொண்டு நடந்தான். ஒரு தரம் திரும்பிப் பார்த்துக் கொண்டான்.

அந்த பெரிய ஜவுளிக் கடையின் வாசலில் பொம்மைப் பெண்கள் விதவிதமாக உடுத்தி கண்ணாடிச் சிறைக்குள் இருந்தார்கள். வாட்ச்மேன் இருந்தான். உள்ளே போகிற, வருகிற நபர்களுக்கு கண்ணாடிக் கதவைத் தள்ளி திறந்து விட்டுக் கொண்டிருந்தான். குறிப்பிட்டவர்களுக்கு சலாம் வைத்தான்.

பார்த்தசாரதி உள்ளே நுழைந்தான்.

எல்லா கவுண்ட்டர்களிலும் கூட்டம். பட்டுப் புடவை செக்‌ஷனுக்கு வந்தான். என்ன வேண்டும் என்றுக் கேட்க பதில் ஆளில்லை. ஏ.சியிலும் விற்பனைப் பையன்கள் வியர்த்துப் போயிருந்தார்கள். ஜரிகை பளிச்சிடச் செய்யும் சக்தி வாய்ந்த விளக்குகள் தொங்கின. நிறம் நிறமாய் புடவைகள் விரிக்கப் பட்டிருந்தன.

பார்த்தசாரதி அந்தக் குடும்பத்தைத் தேர்ந்தெடுத்தான்.

அப்பா, அம்மா, மகள்.

அப்பா உப்பின கைப்பை வைத்திருந்தார். அதை கவுண்ட்டர் மேஜை மேல் வைத்திருந்தார். அம்மா வைரக் கம்மல்கள் போட்டிருந்தாள். ஒவ்வொரு புடவையையும் ஒரு காரணம் சொல்லி நிராகரித்துக் கொண்டிருந்தாள். மகள் சூயிங்கம் மென்று கொண்டு முன் நெற்றியில் விழுந்த குழல் கற்றையை அடிக்கடி தலையைக் குலுக்கி பின்னால் தள்ளி விட்டுக் கொண்டிருந்தாள்.

பார்த்தசாரதி அந்தக் குடும்பத்திற்குப் பின்னால் சென்று நின்று கொண்டான்.

"ஆயிரத்தைநூறு ரூபாய்ல ஒரு சேலை எடுத்துப் போடுங்க" என்றான். இவன் சொன்னதை அந்தப் பக்கம் யாரும் காதில் வாங்கிக் கொள்வதாக இல்லை.

பார்த்தசாரதி கவுண்ட்டர் மேல் அவர் வைத்திருந்த கைப்பையையே பார்த்தான். சரியான வினாடிக்குக் காத்திருந்தான்.

அம்மா ஒரு புடவையை எடுத்து தன் தோளில் போட்டுக் கொண்டு, இது நல்லா இருக்கா? என்றாள். அப்பா கொஞ்சம் சைடில் திரும்ப... அந்த சரியான வினாடி கிடைத்தது.

சட்டென்று கைப்பையை எடுத்து விட்டான்.

ஆனால் அந்த துல்லிய வினாடியில் மகள் பார்த்து விட்டாள்.

"டாடி! உங்க பை! உங்க பை!"

பரபரப்பு உருவாக... பார்த்தசாரதி கைப்பையைப் போட்டுவிட்டு வேகமாக ஜனங்களைத் தள்ளிக் கொண்டு வாசலை நோக்கிக் கிட்டத்தட்ட ஓடினான். ஆனால் வேகமாக ஓட முடியாமல் எதிர்புறம் அடர்த்தியாக ஜனங்கள் வந்ததால்...

பத்தே வினாடிகளில் மாட்டிக் கொண்டான் மிகப் பரிதாபமாக.

## 5

மீனம்பாக்கம் விமானநிலையம்.

மாலை மணி 4.30.

டெல்லியிலிருந்து வந்த ஐ.ஏ போயிங் விமானம் அரை வட்டமடித்து நின்றது. படிகள் கொண்ட வேன் அதன் வயிற்றை நோக்கி ஓடியது.

தடித்த கண்ணாடிச் சுவர் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த கிஷோர் கையில் விரித்த நியூஸ் பேப்பர் இருந்தது.



கிஷோர் - ஒரு கம்பெனி மேனேஜரைப் போல ... ட்டில் இருந்தான். க்ரீம் கலர் நட... க்கு மேட்சாக மெரூன் நிற ஷூ காலடியில் ... கறுப்பு வெளிநாட்டு சூட்கேஸ். அதன் கைப்பிடியில் இண்டியன் ஏர்லைன்ஸ் டேக். ஒரு ... போலத்தான் இருந்தான்.

உணர்ச்சிகளை வெளிக்காட்டாத முகத்தில் சீரான மூக்கு, சிவந்த உதடுகள். சற்று அடர்த்தியான புருவங்கள். மேலுதட்டில் பாதியை அடைக்கும் மீசை ரத்த ஓட்டம் தெரியும் காது மடல்கள்.

பத்து பதினைந்து பேர் இறங்கியதும் இறங்கினாள் அவள்.

கறுப்பு சுடிதார், பாப் செய்யப்பட்ட தலை. அடர்த்தியான சிகப்பில் லிப்ஸ்டிக். தோளில் வேனிடி பாக். கையில் சாம்பல் நிறத்தில் பிரீஃப்கேஸ். தவிர இவளுக்கு சொல்லப்படாத அடையாளமாக முழு கண்களையும் புருவங்களோடு சேர்த்துப் பதுக்கி வைத்திருந்த பெரிய வட்ட கூலிங் கிளாஸ் அணிந்திருந்தாள்.

நெருங்க, நெருங்க அவள் மிகச் சிவப்பு என்பதையும், கம்மீஸ் இல்லாததால் வனப்பு என்பதையும் உணர முடிந்தது. அந்த ஏர் போர்ட்டுக்கே அவள் சொந்தக்காரி போல அரைத்து அரைத்துக் கொண்டு துள்ளலாய் நடந்து வந்தாள். வெளியே வந்து கிஷோரைக் கடந்தாள்.

கிஷோர் உடனே எழவில்லை. வெளி வாசலை அவள் தாண்டும் வரை தன் பார்வையில் அவளை வைத்திருந்து அதன் பிறகு எழுந்தான். பேப்பரை ...க்கிக் கொண்டான். மெதுவாக அவள் திசையில் நடந்தான்.

லீலா எந்தத் தயக்கமும், பதட்டமும் இன்றி ...டந்து டாக்ஸி ஒன்றை அமர்த்திக் கொண்டாள். ...ன் சீட்டில் அமர்ந்து கொண்டதும் திரும்பி பின்

கண்ணாடி வழியாகப் பார்த்தாள். தன்னை யாரும் பார்க்கவில்லை என்று நிச்சயப்படுத்திக் கொண்டாள்.

"எங்கே போகணும்?"

"நுங்கம்பாக்கத்தில் ஹோட்டல் மேண்டியா".

டாக்ஸி புறப்பட்டது.

கிஷோர் தன் பிலட்டை கிளப்பினான். போதுமான இடைவெளி விட்டு சீராகத் தொடர்ந்தான்.

ஹோட்டல் மேண்டியா இது இந்தியாதானா என்று சந்தேகம் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. பார்ப்பவரின் மனதில் பத்து நிமிடம் நின்று பார்க்கும் வண்ணம் ஃப்ரண்ட் எலிவேஷன் மாலை வெயிலில் இன்னும் கவிதை சேர்த்துக் கொண்டிருந்தது.

டாக்ஸியை அனுப்பிவிட்டு உள்ளே வந்தாள். ரிசப்ஷன்-பூமிக்கு வந்த தேவலோகம்.

சிங்கிள் ரூம் பதிவு செய்துக் கொண்டாள். ஷபீனா பேகம் என்று பெயர் சொல்லி அப்படியேக் கையெழுத்திட்டாள். பையன் சூட்கேஸ் எடுத்துக் கொள்ள லிஃப்ட்டுக்கு நடந்தாள்.

லிஃப்ட் மேலே சென்றதும் ரிசப்ஷனுக்கு எதிரே சோபாவில் அமர்ந்திருந்த கிஷோர் எழுந்து ரிசப்ஷனை அடைந்தான்.

"எக்ஸ்க்யூஸ் மி." என்று தன் அடையாள அட்டையை விரித்துக் காட்டினான். "நாங்கள் என்ன உதவி செய்ய வேண்டும் சார்?" என்றாள் அந்த ரிசப்ஷனிஸ்ட் தெளிவான ஆங்கிலத்தில்.

"இப்போது ரூம் புக் செய்த பெண் ஒரு சட்ட விரோதமான செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாள். அவள் சம்மந்தப்பட்ட மொத்த கும்பலையும் வளைக்க நாங்கள் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம். அவள் நடவடிக்கைகளைக் கண்காணிக்க உங்கள் உதவிகள் தேவை. முதலில் அவள் எந்த பெயரில் அறை எடுத்துள்ளாள்?"



"ஷபீனா பேகம்."

"அவளுக்குத் தரப்பட்டிருக்கும் அறை எண்?"

"நானூற்றுப் பதினெட்டு."

"அந்த அறையைக் கண்காணிக்கிற வகையில் நேரெதிராக அறை உண்டா?"

"உண்டு சார். நானூற்றுப் பதினெட்டின் எதிரில் 406. அது தற்சமயம் காலியாகத்தான் இருக்கிறது."

"வெரிகுட். அந்த அறையை நான் எடுத்துக் கொள்கிறேன். அருண்லால் என்ற பெயரில் அறை புக் செய்து கொள்ளுங்கள். ஷபீனாபேகம் என்பது போலிப்பெயர். அவள் பெயர் லீலா. அவள் எந்த போன் நம்பரை முயலச் சொன்னாலும் எனக்கு உடனே தெரிவித்து விடுங்கள். அதேப் போல அவளுக்கு வருகிற ஃபோன்களின் எண்களையும் எனக்குத் தெரிவியுங்கள். நன்றி"

கிஷோர் கையில் சூட்கேசுடன் லிஃப்ட்டில் நான்காகவது தளம் வந்து 406ம் எண் அறைக்கு வந்தான். அந்த விங்கின் கடைசி அறை. நேரெதிராக 418. சாத்தியிருந்தது. ஒவ்வொரு கதவிலும் மேஜிக் - ஐ பொருத்தப் பட்டிருந்தது.

கிஷோர் தன் அறையைத் திறந்து உள்ளே வந்தான். சூட்கேசைக் கட்டிலின் மேல் வைத்துத் திறந்தான். அதில் பல வகையான எலக்ட்ரானிக் சாதனங்கள் இருக்க.. சற்று கனமான அட்டை போல இருந்த சதுர ஐந்து பைசா நாணயம் போன்ற மைக்ரோபோனை எடுத்து ஆன் செய்தான்.

இண்டர்காமில் ரூம்சர்வீஸ் அழைத்தான்.

பையன் கதவு தட்டிவிட்டு வந்தான். பையனுக்கு' இருபத்தைந்து வயது இருக்கலாம். யூனிபார்ம் கழற்றி சாதாரண உடை அணிவித்தால் ஜம்மென்று இருப்பான். அதிர்ஷ்டம் இருந்தால் தமிழ் நடிகனாகி விடுவான்.

"யெஸ் சார்" என்றான் பணிவாக.

"உன் பெயர் என்ன?"

"சிவப்பிரகாசம்"

"சிவப்பிரகாசம் எதிர் அறைக்கும் நீதான் சர்வீஸ் செய்கிறாயா?"

"வந்து."

"தயங்க வேண்டாம்" என்று தன் அடையாள அட்டையைக் காட்டி, "சொல்" என்றார்.

"ஒரு ஆம்லெட்டும், காபியும் ஆர்டர் செய் திருக்கிறார்கள். இன்னும் சப்ளை செய்யவில்லை."

"நல்லதாகப் போயிற்று. இதோ பார். இது மைக்ரோஃபோன். ஒரு புறம் பசை முதுகு உள்ளது. எதிலும் ஒட்டும். ஆம்லெட்டும், காபியும் கொண்டு போய் வைத்துவிட்டு மேசைப்பாய்க்கு மேல் பலகையின் அடிப் புறத்தில் இதை நைஸாக ஒட்டி விட்டு வந்து விடு. சிம்பிள்.

கிஷோர் அங்கே இருந்த டப்பாவை இழுத்து ஒட்டிக் காட்டினான்.

"செய்துவிட்டு என்னிடம் நன்றியும், ஐம்பது ரூபாயும் பெற்றுக் கொள்ளலாம்."

சிவப்பிரகாசம் வாங்கிக் கொண்டான்.

"எனக்கு ஒரு காபி வேண்டும். முதலில் எதிர் அறையில் கொடுத்துவிட்டு, ஒட்டிவிட்டுப் பிறகு எனக்குக் கொண்டு வா."

சிவப்பிரகாசம் தலையை அசைத்து விட்டு சென்றான்.

# 6

லீலா அறைக்குள் வந்து, பையனை அழைத்து ஆம்லெட்டும், காபியும் சொல்லி அனுப்பிய பிற



சூட்கேசைத் திறந்து துண்டு எடுத்தாள். உடைகளை விலக்கி சூட்கேசின் உள்ளே சீராக அடுக்கப் பட்டிருந்த பத்து நூறு ரூபாய் நோட்டுக்கட்டுக் களைப் பார்த்துக் கொண்டாள். மறுபடி உடைகளை மேலே பரப்பினாள்.

கண்ணாடிக்கு முன்னால் நின்று சோம்பல் முறித்தாள்.

கூலிங் கிளாஸைக் கழற்றி மடக்கி வைத்தாள். ஹிந்தி பாடல் ஒன்றை ஹம் செய்தாள். பாத்ரூமுக்குள் சென்றாள். உடைகளைக் களைந்து முழு நீளக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டே ஷவரில் குளித்தாள். துவட்டிக் கொண்டாள். இறுக்கமான பேண்ட்டும், லூசான ஜிப்பா போன்ற மேலுடையும் அணிந்தாள். இன் செய்து கொண்டு, கழுத்துத் திறப்பின் மூன்று பட்டன்களில் ஒன்றை மட்டும் போட்டுக் கொண்டாள்.

டிரெஸ்சிங் மேஜைக்கு வந்து வேனிடி பை திறந்து மேக்கப் செய்து கொண்டிருந்தபோது, அறையின் அழைப்பு மணி ரிர்ரிக் என்றது.

"கமின்" என்றாள், கூந்தலை பிரஷ் செய்து கொண்டே.

சிவப்பிரகாசம் அலுமினிய ட்ரேயில் பீங்கான் தட்டுக்கள் வைத்துக் கொண்டு வந்து ஆம்லெட், பெப்பர், சால்ட், சாஸ், காபி என்று அனைத்தையும் ஒவ்வொன்றாக எடுத்து வைத்துக் கொண்டே அவளை கவனித்தான்.

லீலா தன் ஒப்பனையில் கவனமாக இருந்தாள். ஆண் போல மெலிதாக விசிலடித்துக் கொண்டும் இருந்தாள்.

சிவப்பிரகாசம் கொண்டு வந்த பேப்பர் நாப்கின்களை வேண்டுமென்றே கீழே தவற விட்டான். கொத்தாகக் கீழே விழுந்த ஹோட்டலில் பெயர் அச்சடித்த அந்தக் காகிதக் கைக்குட்டைகள்

சுழன்று கொண்டிருந்த மின் விசிறியின் காற்றில் நாலாதிசைகளிலும் பறந்தன.

அவள் கவனம் திருப்பப்பட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

"ஸாரி மேடம்" என்றவன் மடங்கி அமர்ந்து ஒவ்வொன்றாகப் பொறுக்க ஆரம்பித்தான்.

"ஸ்டுப்பிட்" என்று விட்டு மீண்டும் தன் ஒப்பனையில் ஆழ்ந்து விட்ட அவளை கண் ணோரத்தில் கவனித்துக் கொண்டு, கட்டிலின், அடியில் நகர்ந்து சென்றிருந்த நாப்கினைக் குனிந்து எடுக்கிற சாக்கில் கிஷோர் கொடுத்த மைக்ரபோன் சதுரத்தை கட்டிலின் அடியில் சாமர்த்தியமாக ஒட்டி விட்டான்.

"வேறு ஏதாவது வேண்டுமா மேடம்?" என்றான் பவ்யமாக.

"வேண்டாம்."

அவன் கதவை கைக்குழந்தை போலக் கையாண்டு வெளியே வந்தான்.

லீலா லிப்ஸ்டிக்கை மென்று விட்டு எழுந்தாள் கட்டிலில் அமர்ந்து ஆம்லெட் சாப்பிட்டாள். காப குடித்தாள். மணி பார்த்தாள். ஏழை நெருங்கி கொண்டிருந்தது.

கைப்பையில் இருந்து நாவல் எடுத்து கொண்டு, அதைப் பிரித்தாள். டெலிபோன எடுத்தாள்.

"குட் ஈவினிங், ரிசப்ஷன்"

"எட்டு மணிக்க ஒரு பிரைவேட் டாக்ஸ் வேண்டும் எனக்கு"

"ஏற்பாடு செய்கிறோம் மேடம்"

வைத்தாள். முதுகுக்கு ஒரு தலையணை கொடுத்து சாய்ந்து அமர்ந்து கொண்டு புத்தக படிக்க ஆரம்பித்தாள்.



எதிர் அறையில் கிஷோர் தனது திறந்த சூட்கேசிற்குள் இருந்த ரிசீவரில் சன்னமான ஒலியில் லீலாவின், எட்டு மணிக்கு ஒரு பிரைவேட் டாக்ஸி வேண்டும் எனக்கு என்பதைக் கேட்டதும் தன் வாட்சில் நேரம் பார்த்துக் கொண்டான்.

அதன் பிறகு ரிசீவரில் புத்தகத்தின் பக்கம் புரட்டப்படும் ஓசையும், மின் விசிறியின் மெல்லிய ஓசையும் கேட்டது.

கிஷோர் டெலிபோன் எடுத்து ஒரு எண் கொடுத்து லைனில் காத்திருந்து பேசினான், ஹலோ மதன், பிஸியா?

"இல்லை, நாளைக்கு திருவனந்தபுரம் வரைக்கும் போறேன். அதுக்கான ஏற்பாடுகள்ல இருக்கேன்."

"வெடி குண்டு கேஸ்தானே?"

"ஆமாம்."

"இப்போ நான் வேற ஒரு கேசில இருக்கேன். டெல்லிலேர்ந்து வந்து இன்ஃபர் மேஷன்ல செயல்பட்டுக்கிட்டிருக்கேன். தகவல் பொய் யில்லைங்கிற மாதிரிதான் நடவடிக்கைகள் இருக்க. ஒரு உதவி வேணும். வர்றியா?"

"எங்கேர்ந்து பேசறே?"

"ஹோட்டல் மேண்டியா. ரூம் நம்பர் ஃபோர் நாட் சிக்ஸ்."

"எப்போ வரணும்?"

"பதினைஞ்சி நிமிஷத்தில் வரமுடியுமா?"

"தாராளம்."

பதினான்காவது நிமிடத்தில் வந்து விட்டான் மதன். மழை கோட் அணிந்திருந்தான். அது லேசாக நனைந்திருந்தது.

மீசையை தன் காதலியின் கெஞ்சலுக்காக தியாகம் செய்திருந்தான். கோட் கழற்றி ஸ்டாண்டில்

மாட்டியதும் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு கிஷோர் எதிரில் அமர்ந்தான் அந்த மற்றொரு சி.பி.ஐ. இன்ஸ்பெக்டர்.

கிஷோர் நடுநடுவில் மைக்ரோ ரிசீவரில் புத்தகப் புரட்டல் சப்தத்தைக் கேட்டுக் கொண்டே இவனிடம் விபரம் சொன்னான்.

"டெல்லிலேர்ந்து வந்திருக்காளா?"

"ம்."

"ஸ்மக்ளிங்?"

"இல்லை கள்ள நோட்டு விவகாரம்."

"தயாரிக்கிறதிலயா, விநியோகிக்கிறதிலயா? எதில சம்மந்தப்பட்டிருக்கா?"

"இன்னும் கண்டுபிடிக்கப்படலை. இவ கவுண்டர் ஃபீட் ராக்கெட்ல ஏதோ ஒரு வகையில் சம்மந்தப்பட்டிருக்கான்னு தெரிஞ்சிருக்காங்க டெல்லில. பொறுப்பை நமக்கு ஷிப்ட் பண்ணிட்டாங்க. எதிர் ரூம்ல இருக்கா. எட்டு மணிக்கு ஒரு கார் வேணும்னு கேட்டிருக்கா. இந்த சூழ்நிலையிலேதான் நீ வந்திருக்கே."

"ஐ கெட் தி பிக்சர். அரெஸ்ட் பண்ணி விசாரிக்கிறதில அர்த்தம் இல்லை. அவ போக்கில விட்டு இதில சம்மந்தப்பட்டிருக்கிற கும்பல் முழுவதையும் ரவுண்ட் - அப் செய்யணும்."

"ஆதாரத்தோட"

"அஃப்கோர்ஸ். ரைட். நான் என்ன செய்யணும் சொல்லு."

"எட்டு மணிக்க வெளில் புறப்படற அவளை நான் பார்த்துக்கறேன். ஹோட்டல்ல டுப்ளிகே சாவி வாங்கித் திறந்து நீ அவரூமை ஆராய்ஞ்சிடு இந்த ரூம்லயே காத்திரு."

"செஞ்சிடலாம்" என்றான் மதன் சிகரெ புகையைத் தன் பனியனுக்குள் ஊதிக் கொண்டு.



# 7

நீளமாக வார் வைத்த கைப்பையைத் தோளில் மாட்டிக் கொண்டு தன் அறையை விட்டுப் புறப்பட்டாள் லீலா. லிஃப்டில் கீழே வந்து ரிசப்ஷனை அடைந்தாள்.

"மேடம், நீங்கள் கேட்டபடி டாக்ஸி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நீல நிற அம்பாசிடர் டி.எ.ஒ. 1935 காத்திருக்கிறது டிரைவருடன் தொகை உங்கள் பில்லில் சேர்க்கப்படும்."

"தாங்க் யு"

கண்ணாடிக் கதவு திறந்தவனின் புன்னகையைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்தாள். நீல நிற அம்பாசிடரை அணுகினாள். எண் பார்த்துக் கொண்டாள்.

"எங்க போகணும்மா?" என்றான் படித்துக் கொண்டிருந்த பேப்பரை மடக்கி விட்டு டிரைவர். அடர்த்தியாக மீசை வைத்திருந்தான். நெற்றியில் குங்குமம், விபூதி இரண்டையும் சேர்த்து பூசியிருந்தான் என்பதைவிட அப்பியிருந்தான் என்பதே சரி.

கதவைத் திறந்து பின் சீட்டில் ஏறிக் கொண்ட லீலா, மௌண்ட் ரோட்ல ஒரு துணிக்கடைக்குப் போகணும்.

"போலாம்மா"

"கதவை நோகாமல் சாத்திவிட்டு ஸ்டார்ட் செய்தான்."

ஆனந்த் தியேட்டர் தாண்டி அந்த பெரிய ஷோரும் முன்னால் நிறுத்தச் சொன்னாள். இறங்கிக் கொண்டாள். உள்ளே வந்தாள்.

நிறைய கூட்டம் வழிந்து கொண்டிருந்தது.

"யெஸ் மேடம், வாட் யு வாண்ட்?" என்றாள் கொண்டை போட்ட, வயசுக்கு மீறி புடவையை இறக்கிக் கட்டின அம்மாள்.

"ஸாரீஸ். அதுக்கு முன்னாடி ஒரு ஃபோன் செய்யணும். செய்ய முடியுமா?"

"லோக்கல்தானே?"

"ஆமாம்."

"வாங்க."

கேஷ் மேஜைக்கு அருகில் இருந்த போனைக் காட்டினாள். அருகில் நின்று அவள் எட்டு எண்களுக்கு மேல் சுழற்றவில்லையே என்பதைப் பார்த்துக் கொண்டு விலகினாள்.

"ஹலோ" என்றாள் சன்னக் குரலில்.

"ஹலோ, வெங்கடேசன் ஹியர்" என்றது எதிர்முனை.

"வெங்கடேஷ், ஷபீனா பேகம் பேசறேன்."

"ஹலோ லேடி. உங்க போனைதான் எதி பார்த்துக்கிட்டிருக்கேன். ஹோட்டல் மேண்டி யாதானே?"

"ஆமாம். ஆனா அங்கேர்ந்து பேசலை"

"ஏன்,"

"ஏர்போர்ட்ல இறங்கினதிலேர்ந்து என்னை ஒருத்தர் ஃபாலோ செய்றார். நான் தங்கியிருக்கி ஹோட்டல்லயும் அவரைப் பார்த்தேன். அதனா தான் ஹோட்டல் லேர்ந்து பேசாம வெளில வந் பேசறேன். என்ன செய்யலாம்? இந்த தடவை பிசினஸ் வேணாம். பேசாம திரும்பிப் போய்டட்டுமா?

"இல்லை, அவசரப்பட வேணாம். எங்கேர்ந் பேசறீங்க?"

"மவுண்ட்ரோட்ல ஸ்வர்ணா சில்க்ஸ்லு..."

"தெரியும். இன்னும் அரை மணி நேரத்துக் அதே கடையில எதையாச்சும் புரட்டிக்கிட்டிருங் செய்தி அனுப்பறேன். அதுப்படி நடந்துக்கங் முதலாளியை நான் கன்சல்ட் பண்ணிக்கிறேன்."



"ஓக்கே" என்று வைத்துவிட்டு வரிசை வரிசையாய், வட்ட வட்டமான எவர்சில்வர் ஸ்டாண்டுகளில் பிளாஸ்டிக் ஹாங்கர்களில் மாட்டியிருந்த சேலைகள் பகுதிக்குச் சென்று ஒவ்வொன்றாய் நகர்த்திப் பார்க்க ஆரம்பித்தாள் நிதானமாக.

தன் அறையின் சிட் அவுட்டில் இருந்து கீழே விஸாவை ஏற்றிக் கொண்டு நீல அம்பாஸிடர் புறப்பட்டுப் போகும் வரைக் காத்திருந்த மதன், உடனே தன் அறையை மூடிக் கொண்டு எதிர் அறையை அணுகினான்.

ரிசப்ஷனில் அணுகி மேனேஜரிடம் விளக்கிப் பெற்ற எதிர் அறையின் டூப்ளிகேட் சாவியைப் போட்டு உரிமையாகத் திறந்து உள்ளே வந்தான். சாத்தி தாழிட்டுக் கொண்டான்.

அனைத்து விளக்குகளையும் எரிய விட்டான். டிரெஸ்சிங் மேஜையில் இருந்த மேக்கப் சாதனங்களைத் தொடாமல் பார்த்தான். கோட் ஸ்டாண்டில் சுழற்றிப் போடப் பட்டிருந்த கறுப்பு சுடிதார். மர வார்ட்ரோபுக்குள் வைக்கப்பட்டிருந்த சாம்பல் நிற சூட்கேசைத் திறக்க முயன்றான். பூட்டியிருந்தது.

பாக்கெட்டில் இருந்து சாவிக் கொத்து எடுத்து, தேர்ந்தெடுத்து திறந்தான். உள்ளே மீண்டும் உடைகள் கலைக்காமல் விலக்கிப் பார்த்தான். அடி வரிசையில் பத்து நூறு ரூபாய் நோட்டுக் கட்டுகள். பழைய கட்டுகள். ஒரு கட்டை எடுத்து டர்ர் என்ற தாள்களை விடுவித்து நடுவில் இருந்த சில புதிய நூறு ரூபாய் நோட்டுக்களைப் பார்த்தான்.

இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் வாழைப் பழத்தைத் தோல் உரித்துப் பிடிப்பது போல மடங்கிக் கொண்டு புதியவற்றில் ஒரு நோட்டை மட்டும் விளக்கு வெளிச்சத்தில் பிடித்துப் பார்த்தான். கோட் பாக்கெட்டுக்குள்ளிருந்து கண்ணோடு பொருத்திக் கொள்ளும் லென்ஸ் எடுத்து கண்ணில் இடுக்கிக்

கொண்டு அதன் வழியாக நோட்டைப் பார்த்தான். தடவிப் பார்த்தான். முகர்ந்து பார்த்தான். நோட்டின் எண் பகுதியில் எச்சில் தொட்டு அழுத்தித் தேய்த்துப் பார்த்தான். நோட்டின் நீரோட்டத்தை நெருடிப் பார்த்தான்.

இதைப்போல மேலும் சில கட்டுக்களில் உள்ளே இருக்கும் ஒரு சில புதிய நோட்டுக்களாகத் தேடி எடுத்து செக் செய்தான்.

நோட்டுக்கட்டுகளை முன்போல அடுக்கி னான்.

சூட்கேசின் மேல் பகுதி பிளாப்புகளில் பார்த்தான். காலி, ஒரு டைரி, பர்ஸ், விலாச அட்டை எதுவும் இல்லை. உடைகளும், பிளாஸ்டிக் அணி கலன்களும் மட்டுமே.

சூட்கேசை முன்போலப் பூட்டினான். இருந்த இடத்தில் வைக்கும் முன்பு, சூட்கேசின் ரப்பர் பாதம் வைத்தப் பகுதியில் சொரசொரப்பான மேல் பகுதியில் சாவிக் கொத்தில் இருந்து பேனாக்கத்தி திறந்து பெருக்கல் குறி போட்டான்.

வைத்துவிட்டு பாத்ரூமுக்குள் சென்று பார்த்தான். சோப்பும், டவலும் ஈரமாக இருந்தது. வெளி வந்தான். டீப்பாய் மேல் ஆம்லெட் சாப்பிட்ட பீங்கான் தட்டும், காபி கப்பும் மற்ற பொருள்களும் இருந்தன.

கட்டிலின் மேல் அந்த ஆங்கில நாவல் கிடந்தது. கையில் எடுத்தான். முதல் பக்கம் புரட்டினான். டெல்லியில் ஒரு புத்தகக் கடையின் ரப்பர் ஸ்டாம் குத்தியிருந்தது. இந்திய விலை பென்சிலில் எழுதப்பட்டிருந்தது. வேறு எந்த பெயரோ, குறிப்போ இல்லை.

இருந்தபடி புத்தகத்தை வைத்துவிட்டு அறையைப் பூட்டிவிட்டு தன் அறைக்க வந்து சிகரெட் பிடித்துக் கொண்டு சிட் அவுட்டில் அமர்ந்தான் மதன்.



நட்சத்திரங்களின் நடமாட்டமாய் நகரும் கார்களின் ஒளிப் புள்ளிகளை ரசித்துக் கொண்டு கிரேசருக்காகக் காத்திருந்தான்.

ரத்னபாண்டியன் இரவு கவுனில் இருந்தார். காதில் வாக்மேன் அணிந்து ஸ்டெப் போட்டு ஆடிக் கொண்டிருந்த தன் மகள் செல்வி வைத்துவிட்ட செக்குக்கு எதிராட்டத்தை சதுரங்க போர்டில் மண்டையைக் கசக்கிக் கொண்டு தேடினார்.

"சீக்கிரம் டாடி, எவ்வளவு நேரம்?"

"வெயிட் எ மினிட்." என்றார்.

இண்டர்காம் ஒலித்தது. எடுத்து, "என்ன?" என்றார், "அப்படியா?" என்றார், "கீழே வர்றேன்" என்றார். நாற்காலியை விட்டு எழுந்தார்.

குறுக்கே வந்து இரண்டு கைகளையும் பரப்பிக் கொண்டு நோ டாட். ஒரு நாளாவது ஆட்டத்தை முடிச்சிருக்கீங்களா? போகக்கூடாது என்றாள்.

"இல்லைம்மா, முக்கியமான பிசினஸ் விஷயம். இதோ வந்துடறேன்."

ரத்னபாண்டியன் படிகள் இறங்கி கீழே வந்து தனது அலுவலக அறைக்கு வந்தார். வெங்கடேசன் காத்திருந்தான்.

"என்ன பிரச்சனை?" என்றார் அமர்ந்து.

சொன்னான், அரைமணியில செய்தி அனுப்ப றேன்னு சொன்னேன்.

"யாரா இருக்கும்?"

"போலிஸா இருக்காது நிச்சயமா, சி.பி.ஐ!"

"ஓ.கே. திருப்பி அனுப்பிடறது எனக்குப் பிடிக்கலை."

"ஒண்ணும் பிரச்னையில்லை சார். திறமையா நான் டீல் பண்றேன். பிஸ்னெசை நடத்திடலாம் துவங்க கண் முன்னாடியே..."

"எப்படின்னு சொல்லு. பிடிச்சிருந்தா சரி சொல்றேன்."

சொன்னான்.

"உன் நேரடி பார்வையில நடத்து. அதே சமயம் தொந்தரவு கொடுக்க ஆரம்பிச்சிருக்கிறது யாரு, என்னன்னு விசாரிச்சாகணும். அது அப்புறம், முதல்ல சக்ஸஸ்ஃபுல்லா பிசினெஸ் முடிச்சி அவளை ஊருக்கு அனுப்பி வை."

ரத்னபாண்டியன் மீண்டும் மாடிக்கு வந்து, வாம்மா, ஆடலாம் என்று அமர்ந்தார்.

"மை ஸ்வீட் டாட்" என்று அவர் கன்னத்தைக் கிள்ளித் தன் உதட்டில் வைத்துக் கொண்டாள் செல்வி.

லீலா வாட்ச்சைப் பார்த்துக் கொண்டாள். புடவைகளைத் தள்ளி தள்ளி இப்போது அவளுக்கு எந்த டிசைனுக்கு அடுத்து எந்த டிசைன் சேலை மாட்டப்பட்டிருக்கிறது என்பதே மனப்பாடமாகி விட்டது. இது நல்லாயிருக்கும், இது புது டிசைன் என்று அவளுக்குச் சொல்லிக் கொண்டிருந்த விற்பனைப் பெண் உற்சாகம் வடிந்து இவள் சேலை வாங்கப் போவதில்லை என்று தீர்மானித்து வேறு பார்ட்டியை கவனிக்கப் போய்விட்டாள்.

போனில் வெங்கடேசன் குறிப்பிட்ட அரை மணி நேரம் ஆகிவிட்டது. இன்னும் அவனிடமிருந்து செய்தி வரவில்லை. செய்தி என்றால் எப்படி? போன் வருமா, யாராவது வருவார்களா? இதை விபரமாகச் சொல் வில்லையே அவன்...

என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே அருகே நின்று இளைஞன் அவள் பக்கம் திரும்பி "இது உங்க கர்சீப்தானே?" என்றான் அர்த்தத்துடன் கூடிய பார்வையுடன்.

இவள் கர்சீப் பைக்குள் இருந்த போதிலும் புரிந்து கொண்டு, ஆமாம், தேங்க்ஸ் என்று வாங்கி



கொண்டாள். அதே கடையில் இருந்த ரெடிமேட் பகுதிக்கு வந்தாள்.

த்ரீ பீஸ் மிடி ஒன்றை தேர்ந்தெடுத்து, டிரஸ்ஸிங் ரூம் எங்கே? என்று கேட்டு எடுத்துக் கொண்டு போய் கதவைச் சாத்தி விட்டு, அதை கொக்கியில் மாட்டிவிட்டு இளைஞன் கொடுத்த கர்சீப்பை விரித்தாள். அதன் உள்ளே ஒரு மடிக்கப்பட்ட நீல நிறக் காகிதம் இருந்தது. பிரித்தாள்.

எழுதப்பட்டிருந்த செய்தியைப் படித்தாள். மீண்டும் படித்தாள். பிறகு காகிதத்தை கிழித்தாள். எவ்வளவு சிறிய துண்டுகளாக அதைக் கிழிக்க முடியுமோ, கிழித்து கர்சீப்புக்குள் வைத்து மடக்கிக் கொண்டாள்.

புதிய உடை மிடியை எடுத்துக் கொண்டு வெளி வந்து நாளை வருவதாகச் சொல்லிவிட்டு கடையின் வாசலுக்கு நடந்தாள்.

காரை அணுகினாள். அருகே இருந்த பெட்டிக் கடையில் நின்று சிகரெட் குடித்துக் கொண்டிருந்த டிரைவர் அணைத்து விட்டு வேகமாக வந்தான்.

"ஹோட்டலுக்கே போய்டலாம்."

"சரிம்மா."

ஹோட்டல் வந்ததும் ரிசப்ஷனில் ஒரு புன்னகை வீசிவிட்டு லிஃப்டுக்கு நடந்தாள் தன் அறைக்கு வந்தாள். சாத்திக் கொண்டாள். பாத்ரூம் சென்று முதல் காரியமாக கர்சீப்பில் கொண்டு வந்த துண்டுக் காகிதங்களை கம்மோடில் போட்டு கைப்பிடியை அழுத்த... சத்தத்துடன் தண்ணீர் பாய்ந்த ஒரு துண்டு பாக்கி வைக்காமல் அத்தனை காகிதத் துண்டுகளையும் விழுங்கிக் கொண்டது.

டெலிபோன் எடுத்து டிபன் அய்டங்களை ஆர்டர் செய்தாள். கைப்பையில் இருந்து ஒரு சிகரெட் எடுத்து பற்ற வைத்து கொண்டு கட்டிலில் படுத்துக் கொண்டு நாவல் படிக்க ஆரம்பித்தாள்.

அறையின் அழைப்பு மணி ஒலிக்க...

சிட் அவுட்டில் அமர்ந்திருக்க மதன் எழுந்து வந்து கதவைத் திறந்தான்.

உள்ளே வந்தான் கிஷோர்.

"என்ன இவ்வளவு சீக்கிரம் திரும்பிட்டே?"

"அம்மணி திரும்பச் சொன்னா டிரைவர் திரும்பிதானே ஆகணும்."

"ஓ, ரூமுக்கு வந்தாச்சா?" என்று மதன் சூட்கேஸ் திறந்து உள்ளே இருந்த ரிசீவரை ஆன் செய்ய, மின்விசிறி சுழலும் சப்தம், ஹிந்திப் பாடலின் ஹம்மிங் இரண்டும் கேட்டது. அதன் ஒலியைக் குறைத்து விட்டு, சொல்லு, எங்கே போனா?

"ஸ்வர்ணா சில்க்ஸ். உள்ளேப் போய் லோக்கல் போன் பேசினா, காத்திருந்தா. பைக்ல ஒருத்தன் வந்தான். உள்ளே போனான். இவகிட்டே இவ தவற விடாத கர்சீப்பைக் கொடுத்தான். புறப்பட்டு பைக் எடுத்துக்கிட்டுப் போய்ட்டான். இவ உள்ளே போய் ரகசியமா வந்த செய்தியைப் படிச்சிருக்கணும். திரும்பினா. ஹோட்டலுக்குப் போகலாம்னா. வந்துட்டோம். டிரைவரா வேஷம் போட்டது தப்பு."

"ஏன்?"

"இவ தன்னோட சூட்கேசை எடுத்துட்டுப் போகலை. அதனால எங்கே போனாலும் திரும்பி இங்கேதான் வருவா. நான் கார் பக்கத்திலேயே இருக்க வேண்டியிருந்ததாலே செய்தி கொண்டாந்தவனை ஃபாலோ பண்ண முடியாமப் போச்சி."

"பைக் நம்பர் கவனிச்சியா?"

"அதெல்லாம் கவனிச்சேன். பிரயோஜனப்படுமான்னு பார்ப்போம். குறிச்சி வச்சிருக்கேன். தவிர சைடு பாக்ஸ் பூட்டாம இருந்தது. திறந்து ஆராய்ஞ்சதில ரூல்ஸ், அழுக்குத் துணி நடுவில நகைக்கடை அட்டைப் பெட்டி ஒண்ணு ரப்பர்



பாண்ட் போட்டிருந்தது. பிரிச்சா உள்ளே நகை கிடந்தது ஒரு மஞ்சள் ரோஜா. கூடவே ஒரு லெட்டர். அவசரமா அதையும் படிச்சி மனசில பதிச்சிட்டேன். பேப்பர் எடுத்துக்க மதன். சொல்றேன், எழுது."

"சொல்லு" என்றான் மதன் உடனே தயாராகி.

"டார்லிங் சுதா, உறங்கவே மனசில்லை. உறங்கினால் கனவு வந்து விடுகிறது. கனவில் நீ வந்து விடுகிறாய். அதுவும் எப்படி? கையில் பிரம்போடு. உன் வகுப்பில் பிள்ளைகளை அதட்டுவது போல என்னையும் அதட்டுகிறாய். உடனே நேரில் வந்து உன்னைப் பார்க்க மனம் விரும்பித் தொலைக்கிறது. நள்ளிரவில் உன் வாசலுக்குள் என்னை விடுவாளா அந்த குண்டு ராட்சசி வார்டன்? அதனால் தான் சொல்கிறேன். உறங்கவே மனசில்லை. உனக்குப் பிடித்த மஞ்சள் ரோஜா இத்துடன். வருகிற ஞாயிறு நம் வழக்கமான இடத்தில் சந்திக்கலாம். உன் பிரியத்துக்குரியவன்."

"அவ்வளவுதானா?" என்றான் மதன் எழுதி முடித்து.

"அவ்வளவுதான். இதில நிறைய செய்தி இருக்கு. இதை அப்புறம் கவனிக்கலாம். முதல்ல இப்ப நீ சொல்லு. அவ ரூம்ல ஆராய்ஞ்சியா?"

"யெஸ்"

"ஏதாவது உருப்படியா?"

உதடுகளைப் பிதுக்கினான் மதன்.

"இல்லை. தேர்ந்த கும்பல் டைரி, போன் நம்பர், அட்ரஸ், லெட்டர் இப்படி லீட்மேட்டர் எதுவுமே இல்லை. ஒரு லட்சம் பணம் இருக்கு பெட்டியில. பத்து கட்டு, பழைய நோட்டுதான். நடுவில இருந்த புது நோட்டுக்களையும் சோதிச்சுட்டேன். உண்மையான நோட்டுக்கள்."

"கை கொடு. அப்ப ஒரு விஷயம் படு க்ளியர்!"

"எது?"

"கள்ள நோட்டு விவகாரத்தில் இவ எதில சம்மந்தப்பட்டவன்னு புரிஞ்சி போச்சி! விஷ யோகஸ்த்தர்! டெல்லிலேர்ந்து லட்ச ருபா உண்மையான நோட்டுக்களைத் தூக்கிக் கிட்டு இங்கே வந்திருக்கான்னா... என்ன அர்த்தம்? இங்கேதான் கொள்முதல் நடக்குது. நோட்டு மாற்றல் மெட்ராஸ்லதான். ஆக தயாரிப்பு மெட ராஸ்லதான். மதன், உன் ப்ராஜக்ட்டை யார்கிட்டே யாவது மாத்திவிட்டுடலாம். இதில தோள் கொடு கடைசி வரைக்கும்தோண்டிடலாம்."

"ஷ்யூர்" என்றான் மதன். "விசன்" என்றான் ரிசீவரின் ஒலியைக் கூட்டி.

"காலைல ஆறு மணிக்கு வேக்-அப் ரிங்கொடுங்க" என்றாள் லீலா. தொடர்ந்து ரிசீவரை வைக்கும் சப்தம்.

"அம்மா ஆறு மணிக்கு எழுந்திரிக்கணுமாம். அப்பன்னா நாம அஞ்சு மணிக்கு எந்திரிக்கணும்."

"எந்திரிக்கலாம்" என்ற கிஷோர், அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களை விவாதிக்க ஆரம்பித்தான்.

# 8

சென்னை மத்திய சிறைச்சாலை.

தண்ணீர் தொட்டி அருகே கைதிகள் குளித்துக் கொண்டு, பல்விளக்கிக் கொண்டிருக்க...

பார்த்தசாரதி உட்கார்ந்து முழங்கால்களில் முகம் புதைத்திருந்தான்.

அவன் தோளில் பட்ட கரம் நிமிர வைத்தது.

"அழுவுறியா?" என்றான் தொட்டவன். தடியாயிருந்தான். கறுப்பாய் இருந்தான். மீசையைத்



தனியாய் எடை போட்டால் அரை கிலோ தேறும் போலிருந்தது.

"இல்லை. வெக்கப்படறேன்."

"எதுக்கு? தப்பு செஞ்சிட்டமேன்னா?"

"இல்லை."

"பின்னே?"

"அதை மாட்டிக்காக சரியா செய்யலை யேன்னு..."

தடியன் பெரிய ஹாஸ்யம் எனச் சிரித்து, கைகளையும் தட்டினான்.

"உன் பேரென்ன?"

"பார்த்தசாரதி"

"எத்தனை மாசம் தண்டனை?"

"ஒரே ஒரு மாசம்தான்."

"அப்ப சின்ன குற்றம்தான் செஞ்சிருக்கணும். பிக்பாக்கெட் அடிச்சியா?"

"இல்லை. கூட்டமான ஜவுளிக் கடையில ஹேண்ட்பேகை எடுத்துக்கிட்டு ஓடப் பார்த்தேன்."

"மடக்கிட்டாங்களா?"

"ஆமாம்."

"வேலை கிடைக்கலையா?"

"நிரந்தரமா கிடைக்கலை. ஆனா நான் சோத்துக்காகத் திருடலை."

"அப்புறம்?"

"ஒரு லட்சியத்துக்காக."

"அது என்னாய்யா அது திருடறதில கூட லட்சியமா? தெரிஞ்சிக்கிறேனே, சொல்லு."

பார்த்தசாரதி அவன் முகத்தைப் பார்த்தான். தயங்கினான்.

"சொல்லு. என்னை உன் அண்ணன் மாதிரி நினைச்சுக்க. இந்த ஜெயில்ல உனக்கு என்ன குறையோ என்கிட்டே சொல்லு திமிர் இல்லாத பேசறியே அது பிடிச்சிருக்கு."

"நீங்க யாருங்க?"

"மரியாதை எல்லாம் வேணாம் எனக்கு பி.காம். படிச்சிருக்கே. நான் வெறும் அஞ்சாவது. சும்மா சாமிக்கண்ணுன்னு பேர் சொல்லிக் கூப்புடு."

"இருக்கட்டும். என்ன குற்றம் செஞ்சிங்க?"

"பாரு! மறுபடி மரியாதை! அது தம்பி ஒரு நாள்ல சொல்ற கதை இல்லை. இந்த தைலம் விக்கிறவன் சொல்வான் பாரு சகலவிதமான வலிகளுக்கும் ஒரே நிவாரணின்னு ஒரு கலக்கலைக் காட்டி. அது மாதிரி இன்னதுன்னு இல்லை, சகல தப்பும் செஞ்சிப் பார்த்தாச்சு. பூட்டை உடைக்கிறது. புள்ளையை கடத்தறது, பணத்துக்கு கையை வெட்றது. இப்படி சகலமும். நான் இங்க வர, போக இருப்பேன். இந்த தபா ஆறு மாசம்தான். நெருங் கிடுச்சி. இன்னும் ரெண்டு வாரத்துல போறேன். அது கிடக்குது ஒரு ஓரமா. உன் கதையைச் சொல்லு. என்ன அது லட்சியம்?"

பார்த்தசாரதிக்கு அவனிடம் சொல்ல வேண்டும் போலிருந்தது.

சொன்னான்.

"ஒரு பொம்பளைக்காகவா இவ்வளவு ரோதனை?"

"நீ வக்கத்தவன்னு உதறினவளுக்கு நிரூபிச்சி காமிக்க வேணாம்? அப்புறம் எதுக்கு ஆம்பிளைன்னு மீசை வைச்சிக்கிட்டு."

"நீ டாவடிச்ச பொண்ணோட புருஷனைக் காட்டிலும் பெரிய பணக்காரனாகிக் காட்டணும். அதானே?"



"ஆமாம். டாவடிச்சதா சொல்றது பிடிக்கலை. அவ்வளவு நேசிச்சேன். துரோகி! சண்டாளி!"

"சரி.. அதை விடு. ஒரு மாசம் கழிச்சி வெளில போறே, என்ன செய்யப் போறே?"

"தப்பு செய்யத்தான் போறேன், ஆனா மாட்டிக்காம."

"சபாஷ்! ஒண்ணு செய்யி."

"என்ன?"

"என்னோட சேர்ந்துடு. சொல்லித் தர்றேன் நிறைய. உன்கிட்டே படிப்பு இருக்கு. என்கிட்டே அனுபவம் இருக்கு. ரெண்டையும் கலந்து புத்திசாலித்தனமா, மாட்டிக்காம தப்பு செய்யலாம். எது வந்தாலும் பாதி பாதி. என்ன சொல்றே?"

"சரி" என்றான் பார்த்தசாரதி உடனே உறுதியாக.

## 9

இரவு உடையில் உறங்கிக் கொண்டிருந்த லீலா, டெலிபோன் ஒலியில் உறக்கம் கலைந்தாள். புரண்டு எடுத்தாள்.

"குட் மார்னிங் மேடம். இப்ப மணி ஆறு"

"குட் மார்னிங். தாங்க்யு. நீச்சல் குளம் உபயோகிக்கலாமா?"

"தாராளமா."

லீலா ரிசீவரை வைத்துவிட்டு சோம்பல் முறித்தாள். பாத்ரூம் சென்றாள். திரும்பினாள் நைட்டியைக் களைந்து விட்டு சிங்கிள் பீஸ் நீச்சலுடை அணிந்து கொண்டு மேலே மீண்டும் நைட்டியை அணிந்து கொண்டாள்.

அறையைப் பூட்டிக் கொண்டு வெளியேறி னாள்.

நீச்சல் குளம் வந்தாள். தலைக்கு பேட் வாங்கிக் கட்டிக் கொண்டாள். நீள அலுமினிய நாற்காலியில் நைட்டியை விசிறி விட்டு டைவிங் போர்டுக்குப் படி ஏறினாள்.

இதமான வெயில். நீள செவ்வக அழகான நீச்சல் குளம். துல்லியமான தண்ணீர் அடித்தளம் வரை காட்டிக் கொடுத்தது. ஒரு பக்கம் ரப்பர் டியூப்ஸ் போட்டு இரண்டு சிறுவர்கள் நீச்சல் பழகிக் கொண்டிருந்தார்கள் ஒரு வெளிநாட்டு தம்பதி கை கோர்த்து நீந்தினார்கள்.

டைவிங் போர்டை உதைத்து சற்று உயரே எழும்பி மடிந்து மீன் கொத்தி போல நேராக நீரின் பரப்பைக் கிழித்துக் கொண்டு உள்ளே போய் தூரம் தள்ளி மேலே வந்து சமமாக நீந்த ஆரம்பித்தாள் லீலா.

மதன் தன் அறை ஜன்னலில் இருந்து பைனாக்குலர்ஸ் வழியாக லீலாவைப் பார் வையால் தொடர்ந்து கொண்டிருந்தான்.

"மதன் எமகாதகி அவ. யாராச்சும் வந்து அவளை சந்திக்கிறாங்களான்னு கவனி. எதிர் ரூம் டூப்ளிகேட் சாவி கொடு."

"நேத்து நான் கம்ப்ளீட்டா பார்த்துட்டேன் கிஷோர்."

"நேத்து பைக்வாலா கொண்டு வந்த கர்சீப்புக்குள்ளே இருந்த செய்தியை அவ அழிக்காம இருந்தா கிடைக்கும். ரெண்டாவது, நேத்து அவ தன்னோட கைப்பை எடுத்து வந்தா அதை மட்டும் நாம் பார்க்கலை. இப்போ அந்த கைப்பையைப் பார்க்கலாம். அதிலே ஒரு போன் நம்பர் கிடைச்சாக் கூட நல்ல தகவல்தானே நமக்கு."

"ப்ரொசீட், அவசரமே இல்லாம பாரு. சூட்கேஸ்ல அந்த ஒரு லட்சம் இன்னும் இருக்கான்னு செக்



பண்ணிக்க ஒரு தடவை. அவ புறப்பட்ற மாதிரி தெரிஞ்சா நான் உன்னைக் கூப்புடறேன்."

லீலா கிட்டத்தட்ட நீரில் அது மெத்தை போல மலர்ந்து நீட்டிப் படுத்துக் கொண்டு பாதங்களை மட்டும் மெதுவாக அசைத்து மெல்ல நகர்ந்தாள் கரையேறி மீண்டும் டைவிங் போர்டில் இருந்தும் குதித்தாள்.

கிஷோர் அவள் அறைக்குள் பிரவேசித் தான். நேராய் அவளின் கைப்பையைக் குறிவைத்து நடந்தான். ஜிப் இழுத்து உள்ளே பார்த்தான். இரண்டு கர்சீப்புகள், இரண்டையும் பிரித்து, புரட்டி, உதறிப் பார்த்தான். அப்புறம் ஆயிரத்திச் சொச்சம் பணம் இருந்தது. கொஞ்சம் சில்லறைகள். பயணம் செய்த விமான டிக்கெட். விமானத்தில் கொடுக்கப் பட்ட பெப்பர்மின்ட். ஒரு 'மோர்' சிகரெட் பாக்கெட். ஒரு லைட்டர். அடிப்பாவி! அதுவும் பாக்கி வைக்கவில்லையா?

சிகரெட் பாக்கெட்டை உள்ளே வைக்கப் போனவன் எடுத்துத் திறந்து பார்த்தான் நீளமான ஏழு சிகரெட்டுகள் மிச்சமிருந்தன ஏழையும் கைகளில் கொட்டி ஆராய்ந்தான் முகர்ந்து பார்த்தான். ஒன்றை அழுத்திப் பார்த்தான். குண்டூசி எடுத்து பில்டர் முனைக்குள் குத்திச் செலுத்தி நெருடிப் பார்த்தான். மீண்டும் உள்ளே வைத்தான் கைப் பையை மூடினான். இருந்த நிலையில் வைத்தான். ஏமாற்றம்.

சூட்கேசைத் திறந்து பார்த்தான் உடைகள், அடியில் பத்து கட்டுகள் பணம் இவனும் பணத்தை சோதித்து விட்டு மூடி பூட்டிவிட்டு. அவள் நேற்று அணிந்திருந்த காட்டன் பேண்ட்டைக் கையில் எடுத்தான் அதன் நான்கு பாக்கெட்டுகளிலும் ஆராய்ந்தான்.

சூட்கேசின் சாவியைத் தவிர வேறில்லை ஸ்டாண்டில் மாட்டிவிட்டு தன் அறைக்கு திரும்பி மதனின் தோளில் கை போட்டு "என்ன செய்றா?"

"சாம்பார் வடை மாதிரி நல்லா ஊறிகிட்டு இருக்கா. சரியான கட்டை கிஷோர்!"

"துணிச்சலான கட்டையும் கூட. பாரேன் டெல்லி லேர்ந்து தனியா நோட்டு மாத்த வந்திருக்கா."

"இங்கே ஒரு கும்பலே சப்போர்ட்டா இருக்கிறப்போ என்ன?"

"அது சரி" கிஷோர் டெலிபோனில் போர்டில் எண் சொல்லி, தொடர்பு கிடைத்ததும்.

"ஹலோ எட்வின், குட் மார்னிங் கிஷோர். ஒண்ணுமில்லை ரெண்டு வேலை செய்யணும். முதலாவது ஒரு பைக் நம்பர் சொல்றேன். ஆசாமி அட்ரஸ் விசாரிச்சிசொல்லு ரெண்டாவ்து விமானத் திலேயோ, ரயில்லயோ - ஷபீனா பேகம்ங்கிற பேர்ல இன்னைக்கோ நாளைக்கோ டிக்கெட் எடுக்கப் பட்டிருக்கான்னு தெரிஞ்சி சொல்லு. தகவல்களை ஹோட்டல் மேண்டியா ரிசப்ஷன்ல கொடுத்துட்டா நான் கலெக்ட் பண்ணிக்கிறேன்"என்று விபரம் சொன்னான்.

நீச்சல் குளத்தின் கரையோரத்தில் இருந்த ஏழெட்டு அலுமினிய நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்திருந்தவன் கூலிங்கிளாஸ் அணிந்திருந் தான். கழுத்தில் கேமிரா தொங்கியது. அரை நிஜார் மட்டும் அணிந்திருந்தான்.

அவன் லீலாவை கவனித்தான். அவளை தொடர்ந்து யாராவது கவனிக்கிறார்களா என்று கவனித்தான். குளிர் கண்ணாடி தந்த மறைப்புச் சலுகையில் கண்களைச் சுழற்றி ஹோட்டலின் அறை ஜன்னல்கள் ஒவ்வொன்றாகப் பார்த்தான்.

நான்காவது மாடியில் ஒரு ஜன்னலில் திரைச்சீலை ஓரமாக பைனாக்குலர்ஸ் பிடித்திருந்த



மதனைப் பார்த்து விட்டான். பைனாக் குலர்ஸ் நோக்கின திசையை கவனித்தான். அங்கே லீலா நீந்திக் கொண்டிருந்தாள்.

அவன் எழுந்தான். நீச்சல் குளத்தை விட்டு நகர்ந்து காரிடாரில் இருந்த பப்ளிக்பூத் வந்தான். ஒரு ரூபாய் காயின் போட்டுப் பேசினான்.

"ஆமாம் சார். ஹோட்டலுக்குள்ளேயே இருக்கான். லீலாவுக்கு எதிர்ரும் ஒரு ஆள்தான்னு நினைக்கிறேன். லீலாவை வாட்ச் பண்ணிக்கி ட்டிருக்கான்."

"அப்படியா?" என்றான் வெங்கடேசன் எதிர்முனையில் சில வினாடிகள் மௌனம்.

"என்ன செய்யட்டும் சார்?"

"மேத்திவ், ரிஸ்க் எடுத்துக்கலாமா?"

"நான் தயார். இதென்ன சார் பெரிய விஷயம்? சமாளிச்சிடறேன்."

"அப்போ நான் சொன்னதெல்லாம் நினைவு இருக்கா?"

"இருக்கு."

"செய், ரிவால்வர் வச்சிருக்கேதானே?"

"என் உடன் பிறந்தது சார் அது."

"வெல். சாதிச்சிடு. பார்க்கலாம்."

"நிச்சயமா சார்."

ரிசீவரை அதற்கான கொக்கியில் தொங்க விட்டு, தொடர்பைக் கத்தரித்து விட்டு மீண்டும் நீச்சல் குளம் வந்தான்.

லீலா கரையில் சாய்வு நாற்கலியின் இப்போது நீட்டிப் படுத்திருக்க... அவளை அணுகினான். பைனாக்குலர்ஸ் பகுதிகள் முதுகு காட்டியபடி நின்று காமிரா வழியாக அவளைப் பார்த்து, "எக்ஸ்க்யூஸ் மீ, ஒரு போட்டோ எடுத்துக்கட்டுமா?"

இமைகளை மூடியிருந்தவள் திறந்து "நோ" என்றவள் அவன் கண்ணடிப்பதைக் கவனித்தாள். நேற்று ஷோரூமில் கர்சீப்புக்குள் செய்தி வைத்துக் கொண்டு வந்து கொடுத்தவன் அவன் என்பதை உணர்ந்தாள். "என்ன?" என்றாள்.

"லீலா, உங்களுக்கு எதிர்ரூம்ல இருந்து கிட்டே உங்களை வாட்ச் பண்றாங்க. இயல்பா எனக்கு போஸ் கொடுத்துக்கிட்டே நான் பேசறதை கவனமாக கேட்டுக்கங்க"

க்ளிக் செய்தான். அவள் உடம்பை நெளித்து போஸ் கொடுத்தாள்.

"பார்றா. எவ்வளவு துணிச்சல்! யாரோ வந்து போட்டோ எடுக்கட்டுமான்னு கேட்டான். இவளும் போஸ் கொடுக்கறா." என்றான் இங்கே மதன்.

கிஷோர் அருகில் வந்து எட்டிப் பார்த்தான்.

இங்கே மேத்திவ் வேறு கோணம் மாறிநின்று கொண்டு காமிராவின் வழியாக அவளைப் பார்த்துக் கொண்டு, உதடுகள் அதிகம் பிரியாமல் சன்னமாகப் பேசினான், "பைனாக் குலர்ஸ் வழியா அவன் நம்மையே. பார்த்துக்கிட்டிருக்கான். அதனால இங்கே வேணாம். நான் ஒரு செய்தியும், இன்னைக்கு ராத்திரி நீங்க டெல்லி புறப்பட ரயில் டிக்கெட்டும் வெச்சிருக்கேன். இப்போ போயிடறேன். நீங்க அஞ்சி நிமிஷம் இடைவெளி கொடுத்து ரூமுக்குப் புறப் படுங்க. லிப்ட்ல ரெண்டாவது நம்பர் அழுத்துங்க. அங்கே நான் தர்றேன். அதில உள்ளபடி நடந்துக் கங்க. ஓக்கே?"

மேத்திவ் நகர்ந்தான்.

"மதன், நான் இவனை எங்கேயோ பார்த்திருக்கேன்." என்றான் கிஷோர்.

"எங்கே பார்த்தே?"

"யெஸ்! இவன்தான். இவனேதான். நேத்து துணிக்கடைக்கு பைக்ல வந்து செய்திகொடுத்



தான். இப்பவும் ஏதோ செய்திதான் அவளுக்குக் கொடுத்திருக்கணும். இரு. வர்றேன்."

கிஷோர் அறைக் கதவைத் திறந்து வெளியே சென்று காரிடார் கடைசியில் ஹோட்டலின் முகப்புப் பகுதி பக்கமாகச் சென்று கண்ணாடிச் சுவர் வழியாக பார்க்கிங் பகுதியைப் பார்த்தான். நேற்று வந்த அதே பைக் நின்று கொண்டிருந்தது. திரும்ப மதனிடம் வந்தான்.

"மதன், அதே பைக்ல வந்திருக்கான். உன் பைக் சாவி கொடு. இன்னைக்கு இவனை கடைசி வரைக்கும் துரத்திடறேன். அதே சமயம் நீ லீலாவை விட்டுடாதே. அவ எங்கே போனாலும் போ. ஒக்கே?"

ஹெல்மெட்டும், பைக் சாவியும் எடுத்து கொண்டு லிஃப்ட் வரும்வரை பொறுமை இல்லாமல் படிகளில் இறங்கி ரிசப்ஷனுக்கு எதிரில் வெயிட்டிங் ஹாலில் கண்ணாடி சுவர் அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான் கிஷோர்.

மேத்திவின் பைக் இப்போது அவனது நேரடி பார்வையில் இருந்தது. அது எப்போது புறப்பட்டாலும் அடுத்த சில வினாடிகளில் கிஷோர் புறப்பட்டு விட முடிகிறதூரம். காத்திருந்தான்.

## 10

மேத்திவ் குறிப்பிட்டபடி ஐந்து நிமிடங்கள் கழித்து எழுந்தாள். லீலா. காலை வெயிலில் முக்கால்வாசி உலர்ந்து விட்ட நீச்சல் உடையின் மேல் ஏராள பட்டன்கள் கொண்ட நைட்டியை கோட் போல அணிந்து, பட்டன்களைப் போட்டுக் கொண்ட உள்பாதைகளில் நடந்தாள்.

லிஃப்ட்டை சமீபித்தாள். ஏழாவது மாடியில் இருந்து கீழே வந்து கொண்டிருந்தது அது. காத்திருந்தாள். தரை தொட்டு, இரட்டைக் கதவுகள்

பிறந்து ஒரு தம்பதி வெளியேறியதும் இவள் உள்ளே சென்று சாத்திக் கொண்டு 2ம் நம்பரை அழுத்தினாள்.

இரண்டாவது தளத்தில் நின்று கதவு திறந்தது இப்போது முழு உடையில் இருந்த மேத்திவ் ஒரு கவரைக் கொடுத்தான், "லெட்டர்ல விவரம் இருக்கு. அதுபடி நடந்துக் கங்க" என்று நகர்ந்து கொண்டான்.

லீலா கவரை மடக்கி வழக்கமாகப் பெண்கள் ரகசியமாக வைத்துக் கொள்கிற அதே இடத்தில் வைத்துக் கொண்டு மீண்டும் தன் ப்ளோரான நான்கின் பட்டனை அழுத்தினாள். வெளிப்பட்டு நடந்து அறையைத் திறந்து உள்ளே வந்தாள். சாத்தினாள். கட்டிலில் அமர்ந்து கவரைப் பிரித்தாள்.

உள்ளே ஒரு கடிதமும், ரயில் டிக்கெட்டும்.

சென்னை சென்ட்ரலில் இருந்து டெல்லிக்கு, அன்றைக்கு மாலை புறப்படும் கிராண்ட் ட்ரங்க எக்ஸ்பிரசில், பர்த் டிக்கெட், கடிதத்தைப் பிரித்தாள்.

"மேடம், உங்களைக் கண்காணிப்பதால் இந்த முறை நீங்கள் நேரிடையாக ஈடுபட வேண்டாம். கொண்டு வந்திருக்கும் லட்ச ரூபாயை தனியாய் எடுத்து ஒரு துணியில் மூட்டை போலக் கட்டவும், அறையின் இரண்டாவது ஜன்னலுக்கு நேர் கீழே நான் காத்திருக்கிறேன். பண மூட்டையை ஜன்னல் வழியாக என்னிடம் போடவும். நான்

புறப்பட்டு கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுத்து விடுகிறேன். தவிர உங்களுக்கு பதிலாகத் தர வேண்டிய இரண்டு லட்சம் ஒரு பெட்டியில் போடப்பட்டுப் பூட்டப் பட்டு, நீங்கள் பயணம் செய்யப் போகிற கம்ப் பார்ட்மெண்ட்டில் உங்கள் பகுதியில் கீழே வைக்கப்பட்டு ஒரு சங்கிலி போட்டு இரும்பு கம்பத்துடன் இணைத்துப் பூட்டப்பட்டிருக்கும். இரண்டு சாவிகளும் கூரியர் சர்வீசில் டில்லிக்கு சேட்டுக்கு அனுப்பப்படும். நீங்கள்



அந்தப் பெட்டி உங்களுக்குச் சம்மந்த மில்லாதது போல நடந்து கொள்ளவும். நடுவில் ஏதாவது பிரச்சனையாகி உங்களை சோதனை போட்டாலும் அவற்றின் சாவிகள் உங்களிடம் இருக்காது. ஆகையால் பெட்டி என்னுடையதில்லை என்று சாதிக்கலாம். டில்லி சேர்ந்ததும் வரவேற்க வரும் உங்கள் நபர் சாவிகளுடன் வருவான். நடுவில் பிரச்சனைகள் எதுவும் இல்லாத பட்சத்தில் நீங்கள் "சென்னையில் மழை" என்று சொன்னால் சாவிகள் கொடுப்பார்கள். திறந்து எடுத்துச் சென்று விடலாம். பிரச்சனை எனில் 'சென்னையில் வெயில்' என்று சொல்லி பெட்டியை விட்டுவிட்டு இறங்கி விடுங்கள் தவிர-டிபன் சாப்பிட்ட பிறகு வெறும் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வெளியே புறப்படுங்கள். நீங்கள் தொடரப் படுவீர்கள். உங்கள் இருப்பிடத்திற்குச் சுற்றி போக்குக் காட்டுங்கள். எங்கே நீங்கள் மடக்கப் பட்டாலும் மாட்டிக் கொள்ள வாய்ப்பே இல்லை. இந்தக் கடிதத்தை உடனே எரித்து விடுங்கள். - என்று இருந்தது. மேலும் பின் குறிப்பாக 'ஒட்டு கேட்கும் கருவிகள் உங்கள் அறையில் இருக்கலாம். ஜாக்கிரதையாக செயல்படவும். எங்கும் போன் செய்து விட வேண்டாம்' - என்றிருந்தது.

லீலா புருவங்களை உயர்த்தினாள்.

எழுந்தாள். அறையின் இரண்டாவது ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். அது ஹோட்டலின் காடு பகுதி. மேத்திவ் நின்று சிகரெட் குடித்துக் கொண்டிருந்தான். லீலா "இரு" என்பது போல சைகை செய்துவிட்டு சூட்கேஸ் திறந்து பத்து கட்டுக்களை எடுத்தாள். அதைச் சுற்ற துணி தேடி தனது கம்மீஸ் எடுத்து அதில் வைத்துச் சுற்றினாள்.

அவன் சரியாக கேட்ச் பிடித்துக் கொண்டு அதை அப்படியே தன் கையில் வைத்திருந்த ஹேண்ட் பேகிற்குள் போட்டுக் கொண்டு தன் பைக்கை நோக்கி வாசலுக்கு நடந்தான்.

காத்திருந்த கிஷோர் தயாரானான்.

மேத்திவ் வேகமே இல்லாமல் தன் பைக்கை ஜாலிரைட் போல ஓட்டினான். வேகமாக ஓட்டினா நம்மைத் தொடர்பவர்கள் யாராவது இருந்தால் அடையாளம் காண முடியாது என்பது அவன் படித்த குற்றப் பாடம்.

கிஷோர் மேத்திவை வண்டியுடன் கூடிய அவன் பின் போஸை மனதில் பதித்துக் கொண்டான். சிமெண்ட் நிற முழுக்கை சட்டை, கறுப்பு ஹெல்மெட், பைக் நம்பர் தான் ஏற்கனவே மனப்பாடம். ஆகையால் கிஷோர் மிக மிக தூரத்தில் மேத்திவைத் தொடர்ந்தான். மேத்திவின் பைக்கிற் கும், இவன் பைக்கிற்கும். நடுவில் ஏழெட்டு வாகனங்கள், ஸ்கூட்டர்கள், பைக்குகள், மொபெட்டுகள்.

மேத்திவ் அடிக்கடி ரியர்வியூ கண்ணாடியில் பார்த்துக் கொண்டாலும், இத்தனை வாகனங்கள் தள்ளி ஒருவன் தொடர்வதை உணர முடியாது. ரியர்வியூ கண்ணாடியில் காட்சியின் கொள்ள வைத் தாண்டிய தூரம்.

அண்ணாசாலையில் கிண்டி நோக்கி இருவரும் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

இங்கே லீலா மீண்டும் ஷவரில் ஒரு முறை குளித்துவிட்டு, ஸ்டார் உடை அணிந்து, கூலிங்கிளாஸ் மாட்டிக் கொண்டு புறப்பட்டாள்.

எதிர் அறையை கவனித்தாள். கதவு பாதி திறந்திருந்தது. சிகரெட் வாடை அடித்தது. வேண்டு மென்றே சத்தமாகத் தன் அறைக் கதவை மூடினாள். தோளில் மாட்டின கைப்பை மற்றும் சூட்கேசுடன், ஹீல்ஸின் "டக்,டக்" ஒலியுடன் நடந்தாள்.

காரிடாரின் கடைசியில் அவள் ஹீல்சின் ஒலி தேய்ந்து மறைந்ததும் கிஷோரின் கார் சாவியுடன், கையில் உருளையாய் சுருட்டின அன்றைய தினசரி யுடன் வெளிப்பட்டான் மதன்.



லிஃப்ட் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. மதன் படிகளில் இறங்கிக் கீழே வந்தபோது லீலா ஹோட்டலின் வெளியே ஒரு ஆட்டோவை நிறுத்திக் கொண்டிருந்தாள்.

மதன் காரில் ஃபாலோ செய்கிற திட்டத்தைக் கைவிட்டு வாசலுக்கு விரைந்து காத்திருந்த மற்றொரு ஆட்டோவில் ஏறிக்கொண்டான்.

"இதோ பார். உனக்கு மீட்டருக்கு டபுள் தர்றேன். அந்த ஆட்டோவை விடாம ஃபாலோ செய்யணும். பார்வையிலேர்ந்து தப்ப விட்டுடாதே."

"சரி சார்" என்று புறப்பட்டான் அந்த ஆட்டோ டிரைவர்.

மேத்திவ் ராஜ்பவன் தாண்டி சர்தார் படேல் ரோட்டில் விரைந்தான். நினைவு மண்டபங்கள், அண்ணா பல்கலைக்கழகம் எல்லாம் கடந்து அடையாறு வந்து சிக்னலுக்கு அருகில் இருந்த ஹட்லண்ட்ஸ் முன்னால் வண்டியை நிறுத்தி ஹெல்மெட்டுடன் உள்ளே நடந்தான்.

ஹேண்ட் பேகை பைக்கின் சைடு தகர பாக்சுக்குள் வைத்துப் பூட்டியிருந்தான்.

மேத்திவ் இதுவரை தன்னை யாரும் தொடரவில்லை என்று பெரிதும் நம்பினான். ஹோட்டலுக்குள் வந்து ஏ.சி. அறை ஏந்தான். டிபன் அயிட்டங்கள் ஆர்டர் சொல்லிவிட்டு ஸ்பீக்கரில் ஒலித்த தமிழ் பாடலோடு மெதுவாக இணைந்து பாடினான். மின்சாரம் பாய்ந்த கம்பிகளுடன் ஈக்களை தீய்த்துக் கொண்டிருந்தது பெஸ்ட்டோ பிளாஷ்! மேஜை மீதிருந்த பேப்பர் நாப்கின் எடுத்து மடக்கி அதில் பொம்மை செய்ய ஆரம்பித்தான் மேத்திவ்.

சி.பி.ஐ. என்றால் என்ன பெரிய கொக்கா?

லீலாவை வெட்டிக்குத் தூக்கிக் கொண்டிருப் பான் அவன்.

கிஷோர் தனது பைக்கை மேத்திவின் பைக்கிற்கு வெகு அருகில் நிறுத்தினான். ஹோட்டல் மேண்டியாவில் புறப்படும் சமயம் அவன் ஹேண்ட் பாக் ஒன்றை சைடு பாக்சில் வைத்ததை கவனித்திருந்தான் கிஷோர். பக்கத்து வண்டியின் சைடு பாக்ஸ் பூட்டை கவனித்தான். பலவீனமான பூட்டு.

ஹேண்ட் பாகில் என்ன இருக்கிறது என்று பார்த்துவிட வேண்டும். ஆனால் உள்ளே சென்றவன் வெறும் காபி மட்டும் சாப்பிட்டுவிட்டுத் திரும்பினால் மாட்டிக் கொள்வோம்.

கிஷோர் ஹோட்டலுக்குள் நுழைந்து நான் ஏ.சி. பகுதியில் கேஷுவலாகப் பார்த்தான். அவன் இல்லை. ஏ.சி.அறைக்குள் நுழைந்தான் கிஷோர். ஒரு நாற்காலியில் அமர்ந்து இருட்டுக்கு கண்களைப் பழக்கப் படுத்திக் கொண்டு பார்த்த போது-

அவன் அப்போதுதான் கொண்டு வைக்கப்பட்ட பரோட்டோவில் முதல் துண்டைப் பிய்த்தான். கிஷோருக்கு முதுகு காட்டின நிலையில் அவன் அமர்ந்திருக்க... கிஷோர் சட்டென்று வெளியேறினான்.

படு சுதந்திரமாக தன் சொந்த பைக்கை அணுகுபவன் போல அவன் பைக்கை நெருங்கி, தன் மாஸ்டர் கீ பஞ்சில் சைடுபாக்ஸ் பூட்டைத் திறந்து விட்டான். வெளியே எடுக்காமல் உள்ளேயே வைத்து ஹேண்ட் பேகைத் திறந்தான். மெல்லிசான கம்பீஸ் துணியில் சுற்றப்பட்ட நூறு ரூபாய் நோட்டுக் கட்டுகள். எண்ணினான். பத்துக் கட்டுகள்!

இந்த கம்பீஸ் துணி நேற்று விமானத்தில் வந்தபோது லீலா அணிந்திருந்தது. அப்படியென்றால் இந்த கட்டுக்கள் அவள் சூட்கேசில் பார்த்ததுதான்.

ஆகா! நம்மை மீறி சாமர்த்தியமாக கை மாறியிருக்கிறது பணம்.



கிஷோர் முன்போல் வைத்துப் பூட்டி விட்டு, பைக்கின் எஞ்சின் நம்பர் பார்த்துக் குறித்துக் கொண்டான்.

சாலையைக் கடந்து எதிர்ப்புறம் வந்தான். வரிசையாக சில பூக்கடைகள். மாலைகளில் ஜிகினா சுற்றிக் கொண்டிருந்தார்கள். மணி பார்த்தான். 9.20 அருகே பஸ் ஸ்டாப்பில் அலுவலகத்திற்குப் போகிறவர்கள் அதிகம் பேர் பவுடர் கலையாமல் நின்று கொண்டிருந்தார்கள்.

கிஷோர் அருகே கடையில் குளிர்பானம் அருந்தி, சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான். இவனும் பஸ்சுக்குக் காத்திருப்பவன் போல பேப்பரை விரித்துக் கொண்டு நின்றான். பேப்பரின் நடுவில் வேண்டு மென்றே கிழித்து விட்டிருந்தான். அதன் வழியாக பார்வை அடிக்கடி எதிர்ப்புற பைக்கை கவனித்துக் கொண்டிருந்தது.

ஹோட்டலுக்கு அருகே இருந்த பெட்ரோல் பங்கில் ஸ்கூட்டரை நிறுத்தி மேத்திவின் செய்கைகளை, கிஷோரின் செய்கை களை எல்லாம் துல்லியமாக இதுவரை கவனித்து வந்தவன், பெட்ரோல் பங்கிலேயே இருந்த தொலைபேசியை நாடிச் சென்றான்.

# 11

பார்த்தசாரதிக்கு உள்ளே வரும்போது அவன் போட்டிருந்த உடைகளும், உபரியாக அறிவுரைகளும் ஜெயிலில் வழங்கப்பட்டன, அவன் விடுதலை ஆன சமயம்.

வெளியே வந்தவன் உடனே பஸ் பிடித்து மயிலாப்பூர் வந்தான்.

சாமிக்கண்ணு சொல்லியிருந்த தெருவைத் தேடினான். கண்டுபிடித்தான். 'டைப்படி இருக்கும்.

தாண்டி ஒரு டைலர் கடை இருக்கும். அங்கே வந்து விசாரி'

இருந்தது. விசாரித்தான்.

தடபுடலான உபச்சாரம் கிடைத்தது.

"உக்காருங்கண்ணே, டேய்! ஓடிப் போய் ம வாங்கிட்டு வாடா"

"அதெல்லாம் வேணாம். சாமிக்கண்ணு எங்கே இருக்கார்? உடனே நான் அவரைப் பார்க்கணும்."

"டேய், அண்ணனை அழைச்சிட்டுப் போய் விடு காமி. போங்கண்ணே, இவன் வழி காட்டு வான்."

வழி காட்ட வந்த பொடியன் சந்து சந்தாய் அழைத்துப் போய் இடி பாடுகள் கூடிய கட்டிடத்தின் நடுவில் முளைத்திருக்கும் செடியைப் போல, குடிசை, சாக்கடை பன்றிகள், கொசுக்கள் மையத் தில் ஒரு ஓட்டு வீட்டுக்கு அழைத்து வந்து. "இதான்" என்றான்.

"நீ போடா, அண்ணே"

உள்ளே இருந்து எப்பம் வந்தது முதலில். அப்புறம், "யாரது? உள்ளாற வா. கதவு தெறந்திருக்கு"

கதவைத் தள்ளி உள்ளே வந்தான். ஊறுகாய் பொட்டலத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு சாராயம் குடித்துக் கொண்டிருந்த சாமிக்கண்ணு. "வாய்யா சாரதி, வுட்டுட்டாங்களா? தேதி தெரியாமப் போச்சே. இல்லைன்னா ஜெயிலுக்கு வந்து அழைச்கிட்டு வந்திருப்பனே..."

"பரவால்லை" என்று தரையில் அமர்ந்தான்.

"ஸ்டூலு. ஸ்டூலு இருக்கு பாரு."

"இருக்கட்டும், சகல தப்பும் செய்வேன்னிங்க. இத்தனூண்டு வீட்ல இருக்கிங்க?"



"இது தொழில் இடம் தம்பி. வீடு சௌகார் பேட்டைல இருக்கு. ஆனா அதுவும் பெரிய பங்களா இல்லை. சுமார்தான். ரெண்டு பொண்டாட்டி எனக்கு. பத்தாதுன்னு புதுசு புதுசா வாசனை பார்த்துக்கிட்டே இருக்கணும் எனக்கு. அப்புறம் காசு எப்படி தங்கும்? கெடக்குது விடு. உனக்கு இந்த லைன் வேணாம். எனக்குத் தெரிஞ்ச ஒரு இடத்தில சொல்லி கணக்கெழுதற வேலை ஏற்பாடு செய்றேன், என்ன?"

பார்த்தசாரதி கண்கள் சிவக்க எழுந்து கொண்டான்.

"அட! என்னப்பா? கோவிச்சுக்கிட்டியா?"

"பின்னே? சேர்ந்து காரியம் செய்யலாம்னு சொன்னிங்க. வந்தேன். கழட்டி விடறிங்க. நான் என் தோதுல தனியா பார்த்துக்கறேன். நேர்மைங்கிற வார்த்தையையே என் காதில கேக்க விரும்பலை."

"சரிதான், கொள்கையில் ரொம்ப உறுதியாத் தான் இருக்கே சரி. நீ. இங்கேயே இரு. இந்த வீட்லியே தங்கிக்க. எல்லா வசதியும் செஞ்சித் தர்றேன்."

"அதெல்லாம் இருக்கட்டும். கை பரபரங்குது. ஏதாச்சும் திட்டம் வச்சிருக்கிங்களா? பாங்க் கொள்ளை திட்டம் ஒண்ணு நான் வெச்சிருக்கேன். அதுக்கு ஒரே ஒரு நிஜ துப்பாக்கி மட்டும் வேணும். குண்டு கூட வேணாம்."

"முந்தி மாதிரி இல்லை சாரதி. இப்ப பாங்குல எல்லாம் நிறைய பாதுகாப்பு ஏற்பாடுகள் செஞ் சிட்டாங்க. அதெல்லாம் வேணாம். ஒரு வியாபாரம் நான் செஞ்சிக்கிட்டிருக்கேன். இப்போதைக்கு அதிலே ஒத்தாசை பண்ணு. லாபத்தில் பாதி, பாதி."

"என்ன வியாபாரம்?"

"பெங்களூர்ல போய் வாங்கியாரணும். இங்கே விக்கணும்."

"என்னன்னு கேட்டேன்."

"ஹெரோயின்னா தெரியுமா?"

"போதை பவுடரா?"

"ஆமாம். இங்கே பாரிஸ் கார்னல ஒரு ஆளு இருக்கான். முன்கூட்டி பணம் கொடுத்துடுவான். அதை எடுத்துக்கிட்டு பெங்களூர் போய் வாங்கி அவன் வீட்லே சேர்த்துடணும். கொண்டாந்து அவன் வீட்லே சேர்த்துடணும். முதலே கிடையாது. ஆனா ரிஸ்க்"

"நான் தயார். எப்ப போவணும்?"

"வாரத்துக்கு ஒரு தடவை, நாளை உனக்கு போகணும். முதல் தடவை நாம ரெண்டு பேரும் போவோம். அறிமுகப்படுத்தி விடறேன். அப்புறம் தனியா நீயே போய் வரலாம்"

"சரி" என்றான் படு உற்சாகமாக பார்த்தசாரதி.

## 12

மேத்திவ் சாப்பிட்டு முடித்து பில்லுக்குக் காத்திருந்தபோது ஒரு சப்ளையர் அருகில் வந்து. "சார், உங்க பேர் மேத்திவா?" என்றான்.

"ஆமாம்" என்றான் ஆச்சரியமாய்.

"உங்களை போன்ல யாரோ கூப்பிடறாங்க."

மேத்திவ் ஏ.சி.அறையை விட்டு வந்து போன் எடுத்து, "ஹலோ"

"மேத்திவ், நான் காசி பேசறேன்."

"என்னடா?"

"ஹோட்டல் மேனேஜரலேர்ந்து உன்னை யாராச்சும் ஃபாலோ செஞ்சா கவனிச்சி உன்னை எச்சரிக்கச் சொன்னார். அதனால தொடர்ந்தேன். இப்ப பக்கத்தில் இருக்கிற பெட்ரோல் பங்க்லேர்ந்து பேசறேன்."



"என்னை யாரும் தொடரலை காசி. நீ போகலாம்"

"முட்டாள் தனமா பேசாதே. உன்னை ரொம்ப நேரமா ஒரு மோட்டார் பைக் தொடர்ந்து வருது. இப்போ உன் வண்டிக்கு பக்கத்தில நிறுத்திட்டு எதிர்க்க பஸ் ஸ்டாப்ல நின்னு உனக்காகக் காத்திருக்கான். உன்பைக் சைடு பாக்சைத் திறந்து பார்த்துட்டு மறுபடி மூடிட்டான்."

"மை ஜீசஸ்!"

"அதான் எச்சரிச்சேன். என்ன செய்யப் போறே?"

"சின்னவர் தியேட்டர்ல வெய்ட் பண்ணுவார் காசி."

"உன் வண்டி எஞ்சின் நம்பர் கூட நோட் செஞ்சான்னு நினைக்கிறேன். சிகப்பு சட்டை, கறுப்பு பேண்ட்"

"ஓகே"

மேத்திவ் சில விநாடிகள் யோசித்தான்.

"சரி, காசி. எப்படி அவனை டபாய்க்கிறதுன்னு நான் பார்த்துக்கறேன்."

மேத்திவ் போனை வைத்து விட்டு மீண்டும் ஏ.சி. ஹால் வந்து பில்லுக்கு பணம் வைத்து விட்டு ஹெல்மெட்டுடன் வெளியே வந்தான். ஒரு பீடா வாங்கிப் போட்டுக் கொண்டு பஸ் ஸ்டாப்பில் சிகப்பு சட்டை, கறுப்பு பேண்ட்டில் இருந்த, பேப்பர் படித்துக் கொண்டிருந்த மதனைப் பார்த்துக் கொண்டான்.

தன் பைக்கின் அருகாமை பைக்கைப் பார்த்துக் கொண்டான். வயர்லெஸ் பொருத்தப்பட்டிருக்கிறதா என்று பார்த்தான். இல்லை.

பைக்கை ஸ்டார்ட் செய்தான்.

மயிலாப்பூர் நோக்கி செலுத்த ஆரம்பித்தான்.

சில வினாடிகள் கழித்து ரியர்வியூ கண்ணாடி
யில் தூரமாய் சிகப்புச் சட்டை கிஷோர் தொடர்
வதைப் பார்த்துக் கொண்டான். பீடாவை இன்னும்
மென்று கொண்டிருந்தான்.

அந்த புதிய தியேட்டரில் ஆங்கிலப் படம்
காலை காட்சிக்கு கூட்டம் மோதிக் கொண்டிருந்தது
மேத்திவ் தியேட்டருக்குள் பைக்கைச் செலுத்தி,
அதை நிறுத்துமிடத்தில் நிறுத்தி டோக்கன் பெற்றுக்
கொண்டான். சைடு பாக்ஸ் திறந்து பையை
எடுத்துக் கொண்டான். பேண்ட் பாக்கெட்டில்
இருந்து ஏற்கனவே ரிசர்வ் செய்யப்பட்ட அந்த
படத்திற்கான டிக்கெட்டைக் கையில் எடுத்துக்
கொண்டு ட்ரெஸ் சர்க்கிள் வாசலை நோக்கி
நடந்தான்.

வழியோரத்தில் கிஷோர் பைக்கில் உள்ளே
நுழைந்து இவனைத் தேடுவதையும் கவனித்துக்
கொண்டு உள்ளே நுழைந்தான்.

எலுமிச்சை வாடையுடன் கூடிய சோப்பு
போட்டுக் குளிக்கச் சொன்ன விளம்பரம் ஓடிக்
கொண்டிருக்க... டிக்கெட்டில் டார்ச்லைட் ஒளி
அடித்து வழி காட்டப்பட்டான்.

சென்று தனது சீட்டில் அமர்ந்தான்.

கிஷோர் யோசித்தான். இரண்டு சக்கரவாகனங்
கள் நிறுத்துமிடத்தில் அவன்வண்டி நிற்கிறது.
உள்ளே போயிருக்கிறான். படத்துக்குத்தான்
போயிருக்கிறானா? இல்லை, நான் தொடர்வதைத்
தெரிந்து கொண்டு போக்கு காட்டுகிறானா? என்ன
செய்யலாம்? பாதியில் வருவதாய் இருந்தாலும்,
படம் விட்டு வருவதாய் இருந்தாலும் பைக்கை
எடுக்க எப்படியும் வந்துதானே ஆக வேண்டும் என்று
வெளியே காத்திருப்பதா? இல்லை, உள்ளே போய்
எப்போதும் கண் பார்வையிலேயே வைத்துக்
கொள்ளலாமா?



இவன் ஒரிஜினல் நோட்டுக்களை சேர்க்க
வேண்டிய இடத்தில் எப்போது சேர்க்கப் போகிறான்?
அந்த இடத்தைத் தெரிந்து கொள்ளத்தானே இந்த
அல்லாட்டம்?

கிஷோர் ஒரு முடிவுக்கு வந்தான். உள்ளே
சென்று அவன் எங்கே அமர்ந்து இருக்கிறான் என்று
பார்த்து வைத்துக் கொண்டு வெளியில் வந்து
விடலாம். அவன் என்ன டிக்கெட் எடுத்தான்?
ஹவுஸ் புல்போர்டு மாட்டி விட்டார்களே... வெளியே
காணோம். உள்ளே போய்விட்டான். எனில்
ஏற்கனவே ரிசர்வ் செய்திருக்க வேண்டும்.

கையில் லட்ச ரூபாய் வைத்துக் கொண்டு ஒரு
ஆசாமிக்கு சினிமா பார்க்கிற எண்ணம் வருமா?

கிஷோர் மேனேஜரைப் பார்க்கணும் என்று
சொல்லி உள்ளே நுழைந்தான்.

விளம்பரங்கள் முடிந்து படம் ஓட ஆரம்பித்
திருந்தது.

தன் சீட்டில் தலையை இறக்கி சாய்ந்திருந்த
மேத்திவ், தனக்கு இடது பக்கம் திரும்பினான்.
கழுத்தை லேசாக சாய்த்தான்.

"இந்தாங்க சார்" என்றான் மெதுவாக.

ஹேண்ட் பேகை நீட்ட...

இடதுபுற சீட்டில் அமர்ந்திருந்த வெங்க
டேசன் வாங்கிக் கொண்டான். தன் காலடியில்
வைத்திருந்த கறுப்பு சூட்கேசை காலாலேயே
மெதுவாக மேத்திவ் பக்கம் நகர்த்தினான்.

மெதுவாகக் கேட்டான், "எதுவும் பிரச்னை
ல்லையே?"

"பிரச்னைதான். இந்த தியேட்டர் வரைக்கும்
வந்துட்டான். ஆனாலும் நான் பின் வாங்கறதா
இல்லை. கொடுத்த வேலையை செஞ்சி முடிக்
கிறேன். கவலைப்படாதீங்க. பெட்டியை ரயில்ல

சேர்த்துட்டு. அது கிளம்பிப் போனதும் வர்றேன் விவரமாக சொல்றேன்."

"ரிஸ்க் எடுக்க வேணாம் மேத்திவ்"

"நான் பார்த்துக்கறேன் விடுங்க சார். நீங்க உடனே புறப்பட வேணாம். இண்ட்டெர்வெல்ல புறப்படுங்க. நான் புறப்படறேன்."

"எப்படி சமாளிக்கப் போறே?"

"அவன் பைக் நம்பர் சொல்லி அஞ்சு ரூபா கொடுத்திருக்கேன் அது பொடியன்கிட்டே இந்நேரம் அவன் காத்து பிடுங்கி விட்டுருப்பான். என்னை ஃபாலோ பண்ண முடியாது. என் வண்டியை தரோவா நோட் பண்ணியிருக்கான். ஆனா பிரயோஜனமில்லை. திருட்டு வண்டி. போலி நம்பர் பிளேட். ஆனாலும் இந்த வண்டியில போறது நல்லதில்லை. எதாச்சும் ஒரு சந்துல விட்டுட்டு ஆட்டோ பிடிச்சி வீட்டுக்குப் போய்டறேன். சாயங்காலம் சென்ட்ரல் போய் கச்சிதமா முடிச்சிடறேன்."

"ஜாக்கிரதை மேதிவ்."

கிஷோர் மேனேஜரிடம் சொல்லிவிட்டு முதலில் மாடி பால்கனி பகுதி வந்து இருட்டில் நின்று தலை தலையாகத் தேடினான். பிறகு கீழே இறங்கி வந்தான்.

கிரவுண்ட் ப்ளோரில் இருந்த பிரம்மாண்ட கதவு திறந்து உள்ளே வந்து சுவற்றோடு ஒட்டி நின்று வரிசை வரிசையாகப் பார்த்தான். திரையில் வெளிச்சம் அதிகம் ஆகும்போது முகங்கள் தெளிவாகத் தெரிந்தன. திரையில் இருட்டான காட்சியில் இங்கே வெறும் சில அவுட் தலைகள்தான் தெரிந்தன.

ஆறாவது வரிசையில் மேத்திவைப் பார்த்து விட்டான்.

அவன் சுவாரசியமாய் படம் பார்த்துக் கொண்டிருந்தான்.



இருக்கட்டும். எங்கே போய்விடுவான்?

வெளியே வந்து மேனேஜரின் அறைக்கு வந்தான் கிஷோர். அனுமதி கேட்டு போன் உபயோகித்தான்.

"ஹலோ எட்வின், ரெண்டு வேலை கொடுத்தேனே... எந்த அளவில இருக்கு?"

"ஒரு வேலை முடிஞ்சது. அந்த பைக் நம்பர் கொடுத்திங்களே. அது போலி. அந்த நம்பர் வரைக்கும் இன்னும் 'ரெஜிஸ்ட்ரேஷன் வரலையாம்."

"சபீனா பேகம் டிக்கெட்ஸ் பத்தி?"

"போன்ல சரியா ரெஸ்பான்ஸ் இல்லை. ரெண்டு பேரை ஏர்போர்ட்டுக்கும், ரயில்வே புக்கிங் ஆஃபீசுக்கும் அனுப்பியிருக்கேன். இன்னும் ரிசல்ட்ஸ் வரலை."

"அந்த பைக் என்ஜின் நம்பர் சொல்றேன். ராஜ்தூத் வண்டி. அதை வச்சி கொஞ்சம் விளையாடிப் பாரேன். என்ன?"

"டிரை பண்றேன்."

கிஷோர் பேசிக் கொண்டிருந்த மானேஜர் அறை கண்ணாடி வழியாக தியேட்டரின் வாசல் பகுதியைப் பார்க்க முடிந்தது. வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ள இடத்தைப் பார்க்க முடிந்தது.

போனில் பேசிக் கொண்டிருந்த கிஷோர் திடுக்கிட்டான்.

தனது பைக்கை நோக்கி கையில் ஒரு கறுப்பு சூட்கேசுடன், அணிந்த ஹெல்மெட்டுடன் நடந்து கொண்டிருந்த மேத்திவைப் பார்த்துவிட்டான்.

அட! என்ன இது? கிளம்பி விட்டான்!

"தாங்ஸ். வர்றேன் சார். எனக்கு வேலை இருக்கு" கிஷோர் தன் ஹெல்மெட்டை எடுத்துக் கொண்டு விரைந்த போது...

அவன் பைக்கை ஸ்டார்ட் செய்து தியேட்டரின் வாசலுக்குச் சென்றுவிட்டான். கிஷோர் அவசரமாக தன் பைக்கை அணுகி, திறந்து, அமர்ந்த போது ரிம் இடிபடும் ஓசை கேட்டு குனிந்து பார்க்க... பைக்கின் பின் வீல் தரை தட்டியது.

வெளியில் இருந்த ஆட்டோவுக்கு ஓடினான். பாய்ந்து ஏறினான்.

"அதோ போற பைக்கை" என்று சுட்டிக் காட்ட நிமிர்ந்து திகைத்தான். சாலையே காலியாக இருந்தது. போய்விட்டானா?

"நீ ஓட்டு சொல்றேன். இதே ரோட்ல வேகமா போ."

ஆட்டோ விரைய... ஒரு விஷயம் பளீர் என்று உரைத்தது கிஷோருக்கு.

அவன் தியேட்டரை விட்டு வெளியேறும் போது கையில் கறுப்பு சூட்கேஸ் வைத்திருந்தான். முதலில் அவனிடம் இல்லை. அப்படியானால் தியேட்டருக்குள் பரிமாற்றம் நிகழ்ந்திருக்கிறது. உள்ளே இன்னொரு சகா இருக்க வேண்டும். அவன்தான் இந்தப் பெட்டியை தந்து பணம் உள்ள ஹேண்ட்பேகை வாங்கிக் கொண்டிருக்க வேண்டும். இப்போது இந்தப் பெட்டியில் நிச்சயமாக கள்ள நோட்டுக்கள் இருக்க வாய்ப்பு உண்டு.

திட்டமிட்டு என் பைக்கில் காற்று எடுத்திருக்கிறான். விடக்கூடாது அவனை.

"இன்னும் வேகமா போப்பா..."

எத்தனை வேகமாகச் சென்றும் அவனைக் காணவில்லை.

"சரி, பக்கத்தில இருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்கு போ" என்றான் கிஷோர்.

13

"அப்புறம்?" என்றான் மதன்.



"வெய்ட். முதல்ல எனக்கு ஒரு காபி சொல்லு" என்றான் கிஷோர்.

ஹோட்டல் மேண்டியாவில் அவர்கள் எடுத்திருந்த அறை. மணி மதியம் இரண்டு முப்பத்தி ஐந்து

மதன் போனில் காபி சொல்லி விட்டு தன் ப்ளஸ் கிஷோரின் சிகரெட்டுகளைப் பற்ற வைத்தான்.

"நான் ஃபாலோ பண்றேன்னு தெரிஞ்சுக்கிட்டான். அதனால தியேட்டர்ல எப்படியோ என் பைக்ல காத்து எடுத்து விட்டுட்டு பறந்துட்டான். ஆட்டோல துரத்தி பிடிக்க முடியலை. அப்புறம் ராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷன்லேர்ந்து டிராஃபிக் கண்ட்ரோலுக்கு தகவல் சொல்லி அவன் பைக் நம்பர் கொடுத்து மடக்கி நிறுத்தச் சொன்னேன். ஸ்டேஷன்லேயே காத்திருந்தேன். முக்கால் மணி நேரத்தில தகவல், மயிலாப்பூர்ல ஒரு ரோட்டோரமா பைக் மட்டும் கிடைச்சிருக்கு. உடனே அங்கே போனோம். சைடு பாக்ஸ்ல எதுவும் இல்லை. கறுப்பு சூட்கேசோட ஆள் பறந்துட்டான். மிஸ் பண்ணிட்டேன். பைக்கை சீஸ் பண்ணி ஃபிங்கர் பிரிண்ட்ஸ் எடுக்க ஏற்பாடு செஞ்சிட்டு, தியேட்டர் வந்து நம்ம பைக்கை எடுத்து காத்து பிடிச்சி வந்து சேர்றேன்."

"அவ பணத்தை ரகசியமா அவன் கிட்டே சேர்த்துட்டது தெரிஞ்சிருந்தா நான் வெட்டிக்கு அலைஞ்சிருக்கத் தேவையில்லையே, சண்டாளி! வேணும்னே கண்ட இடத்துக்கும் சுத்தினா. பாரிஸ் கார்னர்ல ஒரு கைத்தறி எக்ஸிபிஷனுக்குப் போனா. அப்புறம் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்ல ஜட்டி வாங்கினா. லஸ்ஸி சாப்பிட்டா. புக்ஃபேர் போனா, திரும்ப ரூமுக்கு வந்து லஞ்ச் சாப்பிட்டு தூங்குறான்னு நினைக்கிறேன்" என்ற மதன் கட்டில் மேலிருந்த சூட்கேசினுள் மைக்ரோ ரிசீவரை ஆன் செய்து

விட்டு, சற்று நேரம் மின்விசிறி சுழற்சி சப்தம் கேட்டுவிட்டு வந்து அமர்ந்தான்.

"நடந்தது பூரா எஸ்.பிக்கு ரிப்போர்ட் செஞ்சேன். 'உங்க கண் முன்னாடியே ஜோரா பொருள் பரிமாற்றம் நடத்தி காமிச்சிருக்கான். பணம் கொடுத்திருக்கான். பெட்டியோட போயிருக் கான். டெல்லில அந்தப்பொண்ணை ரொம்ப ஸ்ட்ராங்கா கள்ள நோட்டு விவகாரத்தில சம்மந்தப்படுத்தி சந்தேகிக்கிறாங்க. நடந்ததை வச்சிப் பார்க்கிறப்போ சூட்கேஸ்ல கள்ள நோட்டுகள் இருக்க வாய்ப் பிருக்கு. அந்த லீலாவை லேசா நினைக்காதிங்க. தொடர்ந்து கண்காணிங்க. அந்த சூட்கேஸை அவகிட்டே ஒப்படைக்க அவன் முயற்சி செய்யலாம். சரியான சந்தர்ப்பத்திலே மடக்கி வேணுமின்னா அவளை கைது பண்ணி அழைச்சுட்டு வந்துடுங்க, விசாரிச்சுடலாம்'னு சொன்னார்."

"இப்பவே அவளை நாலு அறை விட்டு லட்ச ரூபாய் துணில கட்டி கொடுத்து அனுப்பினியே, யார் அவன், எதுக்குன்னு விசாரிச்சா என்ன?"

"ஸ்ட்ராங்கா மறுக்கலாம். இல்லைன்னா கடைசி வரைக்கும் காட்டிக் கொடுக்காம இருந்திடலாம். மெட்ராஸ்ல புள்ளி யார்னு கொஞ்சம் க்ளு தெரிஞ்சுக்கணும் முதல்ல."

"அவனை விட்டது தப்பு. சூட்கேசோட அவனைப் பிடிச்சிருக்கணும். சுலபமா உண்மை களை கக்க வச்சிருக்கலாம்."

"ரைட், தப்பிட்டான். இனி ஆக வேண்டி யதைப் பேச, அவளை அரெஸ்ட் பண்றது கடைசி பட்சமாக வச்சிக்கலாம். இப்ப என்ன செய்யலாம்? யோசனை சொல்லு."

அறைக்கதவு தட்டப்பட்டு காபி வந்தது. சிவப்பிரகாசம்!

"சிவப்பிரகாசம், லஞ்ச் ரூமிலதானே கொண்டு போய் கொடுத்தே?"



"ஆமாம் சார்"

"அப்போ என்ன செஞ்சிக்கிட்டிருந்தாங்க?"

"ஒவ்வொரு துணியா மடிச்சி வச்சிக்கிட்டிருந் தாங்க."

கிஷோர் மதனைப் பார்த்தான். "இன்னிக்கு புறப்படறாளா?"

"இருக்கலாம்" என்று மதன் தோள்களைக் குலுக்கியபோது... டெலிபோன்.

"ஹலோ" என்றான் கிஷோர்.

"கிஷோர், நான் எட்வின் பேசறேன், பைக் என்ஜின் நம்பர் கொடுத்திங்களே, அதை வச்சி மோட்டர் ஏஜன்சில் மூலமா வண்டி வாங்கினவர் அட்ரஸ் தெரிஞ்சி அவரை விசாரிச்சதிலே நாலு மாசம் முன்னாடி திருட்டு போய்டுச்சின்னு போலீஸ்ல கம்ப்ளைண்ட் கொடுத்திருக்காராம். ஒரிஜினல் நம்பர் வேற."

"எந்த ஸ்டேஷன்ல புகார் கொடுத்தாராம்?"

"வேளச்சேரி."

"அப்போ எட்வின், நீ வேளச்சேரியை தொடர்பு கொண்டு அந்த பைக் சம்மந்தமா ராயப்பேட்டை ஸ்டேஷனை காண்டாக்ட் பண்ணச்சொல்லு. வண்டி இப்போ அங்கே தான் இருக்கு. திருட்டு வண்டியா! ஆள் தப்பிச்சிட்டான்யா. இன்னொரு தகவல் கேட்டனே..."

"யெஸ், இதோ, சபீனா பேகம்ங்கிற பேர்ல இன்னைக்கு ஈவினிங் புறப்படற ஜி.டி. எக்ஸ்பிரஸ்ல டில்லிக்கு பெர்த் டிக்கெட் எடுக்கப்பட்டிருக்கு. நம்பர் சொல்றேன்."

சொல்ல... ஆர்வமாய் குறித்துக் கொண்டான்.

"தாங்க் யூ எட்வின்" என்று வைத்து, "லீலா இன்னைக்கு ஈவினிங் ஜி.டி.ல டில்லி புறப்படறா மதன். இதான் பர்த் நம்பர்" என்றான் கிஷோர்.

"லட்ச ரூபாயைக் கொண்டாந்து கொடுக்கிறதுக்காக மட்டுமா வந்திருப்பா? எஸ்.பி. சொல்ற மாதிரி எப்படியும் அவகிட்டே அந்த சூட்கேஸ் சேர்க்கப்படலாம்னு நினைக்கிறேன்."

"அப்போ, நமக்கு சில ஏற்பாடுகள் இருக்கு மதன். லீலாவும் சரி, அந்த பைக் ஆசாமியும் சரி, அவங்களை நாம் வாட்ச் பண்றோம்ங்கிறதை நல்லா தெரிஞ்சிக்கிட்டாங்க. ரெண்டு பேர் அடையாளங்களும் அவங்களுக்குத் தெரியும். நாம மாறு வேஷம் போடணும். அவங்களை விட்டு விலகின மாதிரி காமிக்கணும். ஸோ, முதல்ல ஹோட்டலை காலி செய்யலாம்."

"காலி செஞ்சிட்டு...?"

"சொல்றேன் வா, சென்ட்ரல்ல வெச்சிக்கலாம் விவகாரத்தை."

இருவரும் தங்கள் பொருள்களை சேகரிக்கத் துவங்க.. எல்லாவற்றையும் பெட்டியில் பேக் செய்துவிட்டு சுகமாக உறங்கிக் கொண்டிருந்தாள் லீலா அவள் அறையில்

## 14

பார்த்தசாரதி வாரத்திற்கு ஒரு முறை பெங்களூர் சென்று போதைப்பொருள் சாமர்த்தியமாக வாங்கி வந்து உரியவரிடம் சேர்த்தான். ஒரு தடவைக்கு பத்தாயிரம் கிடைத்தது. சாமிக்கண்ணுவுக்கு ஐயாயிரம், இவனுக்கு ஐயாயிரம். மாதத்திற்கு இருபதாயிரம்.

ஆயிரம் ரூபாய் வாடகையில் சிறிய வீடு பிடித்தான். செகண்ட் ஹேண்டில் கார் வாங்கினான். பெங்களூர்காரனுக்கு அஸ்ஸாமில் இருந்து சப்ளை ஆகிற நேக் தெரிந்து இவன் நேரடியாக மூவ்



செய்தான். அஸ்ஸாமில் இருந்து தமிழ்நாட்டுக்குக் கொண்டு வருகிற பொறுப்பை ஏற்றுக் கொண்டான்.

சாமிக்கண்ணுவை கௌரவ ஆலோசகராக வைத்துக் கொண்டு டீ கம்பெனி ஆரம்பித்தான். அஸ்ஸாமில் இருந்து வருகிற டீ பெட்டிகளில் ரகசியமாக போதை வஸ்துகள் வரவழைத்தான். அஸ்ஸாமில் கிளை அலுவலகம்.

பணம் வெள்ளமென வழிந்தது.

மூன்றே வருடங்கள், பங்களாக்கள், எஸ்டேட்கள்.

ஆள், படை, அம்பு.

பணம் புதிய பலம் தந்தது. எதையும் சமாளிக்கிற தைரியம் தந்தது. பிரச்னைகள் வரும் போது சம்பந்தப்பட்டவர்களை பணம் சந்தித்து சமாதானம் செய்தது.

விமானத்தில் டில்லி வந்து இறங்கினான்.

கார் வாடகைக்கு வரவழைத்தான். சூட்கேசுடன் ஏறிக் கொண்டு விலாசம் சொன்னான்.

சொன்ன விலாசத்தில் இறங்கி மணி அழுத்தினான் பார்த்தசாரதி. கதவு திறந்தவள் அவளே.! இதுவரைபெயர் குறிப்பிடப்படாத அவன் காதலி. இன்னொருத்தன் மனைவி.

அடையாளம் தெரியாமல் சற்று விழித்தாள்.

"என்ன முழிக்கிறே? தெரியலையா என்னை?"

குளிர் கண்ணாடி கழற்றினான். உள்ளே வந்தான்.

"பார்த்தசாரதி! நீங்களா? நீங்களேதானா?"

"ஞாபகம் வந்துடிச்சா? உக்காரு. எங்கே உன் புருஷன்?"

மௌனமாய் இருந்தாள். பார்த்தசாரதி தன் பெட்டியைத் திறந்தான். உள்ளே நெருக்கியடித்துக் கொண்டு பத்திரங்கள். ஒன்றை எடுத்தான். "பாரு,

யார் பேர்ல உள்ள சொத்து? பாரு, என் பேர்ல இருக்கா?"

தலையாட்டினாள் மௌனமாக, பிரமிப்பாக.

"இது எல்லாம் என் சொத்துப் பத்திரங்கள், கிட்டத்தட்ட எண்பது லட்சத்துக்கும் மேல, என்ன முழிக்கிறே? உன் புருஷனுக்குமாச வருமானம் என்ன? அவனோட ஜவுளி கடையை விலைக்குத் தர்றானான்னு கேளு. என்னடி பதில் பேச மாட்டேங்கறே? இந்த பணம் என்கிட்டே இல்லாத தாலேதானே மனசு மாறினே? இப்போ உன் புருஷனைவிட பல மடங்கு சொத்துக்கு அதிபதி, தாலியை கழட்டி கழட்டி எறிஞ்சிட்டு வருவியா? வந்தாலும் நான் ஏத்துக்கறதா இல்லை. ஒரு வகையில் உனக்கு நன்றி சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன். எனக்குள்ளே பண வெறி ஏற்படுத்தினது நீதான். இல்லைன்னா ஆயிரம் ருபா சம்பளத்துக் குள்ளே எங்கயாச்சம் நாற்காலி தேய்ச்சிக்கிட்டிருப் பேன். வழிமுறையானதோ இல்லையோ, இன்னைக்கு நான் பெரிய மனுஷன். பணத்தாலேயே எதையும் சாதிப்பேன். சந்திப்பேன். காதலை பணத்துக்காகக் கொச்சப் படுத்தினியேடி பாவி! பார்த்துக்க இப்ப, வர்றேன். இதை சொல்லிட்டுப் போகத் தான் வந்தேன். எங்கே உன் புருஷன்னு கேட்டேனே?"

தலை குனிந்து நின்றாள், "அவர் இப்போ என்னோட இல்லை."

"அப்படின்னா...?"

"என்னை விட்டுட்டு இன்னொருத்தியை சேர்த்துக்கிட்டு திரியறார், இங்கே வர்றதே இல்லை. நான் டீச்சர் வேலை பார்க்கறேன்."

"மனசை விரும்பியிருந்தா நல்ல மண வாழ்க்கை அமைஞ்சிருக்கும். நீ பணத்தை விரும்பினே. உனக்கு இப்போ அதுவும் போச்சா? பரிதாபப்படத்தான் முடியும், வர்றேன்."



சூட்கேசை எடுத்துக் கொண்டு புறப்பட்டான் பார்த்தசாரதி. வீட்டை விட்டுப் புறப்படும்முன் ஒரு தரம் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

## 15

சென்ட்ரல் ஸ்டேஷன்.

வெளிச்சம் கரைந்து கொண்டிருந்த மாலை.

கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ் புறப்பட இன்னும் இருபது நிமிடங்கள் இருந்தன. த்ரீடயர் கம்பார்ட் மெண்டில், பர்த் நம்பர் 27 இருந்த செஷனில் கீழே அந்த கறுப்பு சூட்கேஸ் இருந்தது. இரும்பு கம்பத்துடன் சங்க இருந்த செக்ஷனில் கீழே அந்த கறுப்பு சூட்கேஸ் இருந்தது. இரும்பு கம்பத்துடன் சங்கிலி போட்டு இணைத்து கட்டப்பட்டிருந்தது.

அங்கே அமர்ந்திருந்த நான்கு பேர்களில் இரண்டு பெண்கள், இரண்டு ஆண்கள். இன்னும் லீலா வரவில்லை.

யார்டிலிருந்து கொண்டு வந்து வண்டியை நிறுத்தியதுமே ஏறி சூட்கேசை வைத்துப் பூட்டி விட்டு கம்பார்மெண்டுக்கு சற்று தள்ளி நின்றிருந்த மேத்திவ், இப்போது முற்றிலும் மாறிய அடையாளங்களில் இருந்தான்.

லீலா வருவதற்காகக் காத்திருந்தான்.

மதனும், கிஷோரும் உள்ளே வந்தனர், அவர்களும் முகம் மாறியிருந்தார்கள். உடை மாறியிருந்தார்கள். ராஜஸ்தானிகள் போல டர்பன் கட்டி, மடிசார் போல வேஷ்டி கட்டியிருந்தார்கள். சட்டைக்கு மேலே பளபள வென்று கையில்லாத ஜாக்கெட் அணிந்திருந்தார்கள்.

குறிப்பிட்ட பெட்டியை நிதானமாக அடைந்து கொண்டே சுற்றிலும் மேத்திவ் தென்படுகிறானா என்று பார்த்துக் கொண்டார்கள்.

கம்பார்ட்மெண்ட்டில் ஏறி பர்த் நம்பர் 21 தேடி... நெருங்கிப் பார்த்த போது, லீலா இன்னும் வந்திருக்கவில்லை.

கிஷோர் சங்கிலியில் பிணைத்த அந்த சூட்கேசைப் பார்த்து விட்டான். இதோ போன்ற சூட்கேஸ்தான் தியேட்டரிலிருந்து அவன் எடுத்துப் போனது.

"இது யார் சூட்கேஸ்?"

இரண்டு தம்பதிகளிடமிருந்தும் பதில் இல்லை.

"கேக்கறேனில்லை. இது யாரோடது?"

"எங்களுதில்லை."

"எங்களதுமில்லை. நாங்க வந்தப்போவே இருந்திச்சி.

கிஷோர் மதனைப் பார்த்தான். இருவரும் கண்களால் பேசிக் கொண்டனர்.

கீழே இறங்கினார்கள்.

மதன் மெதுவாய் சொன்னான்.

"அந்த பயதான் கொண்டாந்து வெச்சிருக்கணும்."

"அப்போ அவன் இங்கதான் இருக்கணும்."

இருவரும் யாதார்த்தமாக கூட்டத்தைப் பார்ப்பது போல தேடினார்கள். மேத்தில் இப்போது ஸ்டேஷன் வாசலில் இருந்தான்.

ஒரு டாக்ஸியில் இருந்து லீலா இறங்கினாள்.

அவளை உரசினது போல நடந்து முணு முணுத்தான், "வந்தாச்சு, ஜாக்கிரதையா நடந்துக்கங்க"

லீலா தன் கம்பார்ட்மெண்ட்டில் ஏறி, தன் பகுதிக்கு வந்து ஒரு பெண்ணின் அருகில் அமர்ந்து கொண்டு சூட்கேசைப் பார்த்தாள். கொண்டு வந்த சூட்கேசை மேலே வைத்தாள்.



அவள் வந்து அமர்ந்ததை கவனித்த கிஷோர் மதனிடம் கேட்டான். "வந்துட்டா, என்ன செய்யலாம்?"

"ரயில் புறப்பட இன்னும் ஏழு நிமிஷம் இருக்கு கிஷோர் மூணு நிமிஷம் இருக்கிறப்போ செயல் படலாம். ஏறி சந்தேகத்தின் பேர்ல கைது செய்றதா சொல்லி அவளை கீழே இறக்கி, பெட்டியையும் எடுத்துக்கலாம். அது வரைக்கும் அவன் வந்து அவளை சந்திக்கிறானான்னு பார்க்கலாம், சாவியை ஒப்படைக்க அவன் வரலாம். அப்படி வந்தா அவனையும் கப்புன்னு பிடிச்சி அமுக்கிடலாம்."

காத்திருந்தார்கள்.

ஆனால் மேத்தில் வெகு தூரத்தில் நின்று கொண்டிருந்தான். லீலாவை அருகில் சென்று சந்திப்பதோ, பேசுவதோ ஆபத்து என்பது அவனுக்குத் தெரியும். முன்னே போட்ட திட்டப் படியே சாவிகளை கூரியர் சர்வீசில் அனுப்பி விடலாம். ரயில் புறப்படும்வரை நின்று கொண்டிருந்த திரும்பிவிட வேண்டும்.

ரயில் புறப்பட அவன் காத்திருந்தான். சி.பி.ஐ. அதிகாரி வந்திருக்கிறானா என்று அவன் கண்களும் கூட்டத்துக்கு நடுவில் அலை பாய்ந்து கொண்டு தானிருந்தன.

"டைம் ஆச்சி கிஷோர்" என்றான் மதன்.

"ஓக்கே வா."

இரண்டு பேரும் பெட்டிக்குள் ஏறினார்கள். நேராய் லீலாவை நெருங்கினார்கள்.

"மேடம், அந்த சூட்கேஸ் உங்களோடதா?"

"நோ" என்றாள் அலட்சியமாக.

"சரி, உங்க பேர் என்ன?"

"சபீனா"

"பேகத்தை விட்டுட்டீங்களே மிஸ்லீலா"

லீலா முகம் மாறினாள்.

கிஷோர் தன் சட்டை பாக்கெட்டில் இருந்த அடையாள அட்டை எடுத்து அவள் முன் விரித்து காட்டி, "நான் யாருன்னு உங்களுக்குத் தெரியும். கொஞ்சம் ஒத்துழையுங்க. உங்களை சந்தேகத்தின் பேர்ல கொஞ்சம் விசாரிக்க வேண்டியிருக்கு. வர்றிங்களா எங்க கூட?"

"நோ, என்ன சந்தேகம்? நான் எந்த தப்பும் செய்யலை. இந்த பெட்டிக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை."

"சரி. சம்மந்தம் இல்லை. ஆனா ஆள் மாறாட்டத்துக்கு விளக்கம் சொல்லுங்க. நீங்க சபீனாபேகம் இல்லை. லீலா. நீங்க சபீனாபேகம் தான்னு நிரூபிச்சிட்டிங்கன்னா நாங்களே உங்களை டில்லிக்கு விமானத்திலே அனுப்பி வைக்கிறோம். நாங்க வலுக்கட்டாயமா உங்களைக் கீழே இறக்க வேண்டிய சங்கடத்தை உண்டு பண்ணாதிங்க மேடம்."

வியர்த்தாள். எழுந்தாள்.

மதன் குனிந்து சங்கிலிப் பூட்டை லீவர் சோதித்து, திறந்து பெட்டியை எடுத்தான்., அதையும் திறந்தான். உள்ளே இருபதுரூபாய், ஐம்பது ரூபாய் நோட்டுக் கட்டுகள். புதிய கட்டுகள். ஒரு நோட்டைத் தடவிப் பார்த்தே

அது கள்ள நோட்டு என்று உணர்ந்து கொண்டான்.

லீலா கீழே இறக்கப்பட்டாள். ரயில் புறப்பட சிக்னல் போடப்பட்டது.

தூரத்திலிருந்து இரண்டு ராஜஸ்தானிகள் லீலாவின் கையைப் பிடித்துக் கீழே இறக்குவதையும், ஒருவன் கையில் அந்த கறுப்பு சூட்கேஸ் இருப்பதையும் கவனித்து திடுக்கிட்ட மேத்தில், உடனே நிலைமையை உணர்ந்தான்.



சினாவா வெங்கடேசன் சொன்ன உத்தரவை செயலாக்க வேண்டி வரும் என்று எதிர்பார்க்கவே இல்லை. தன் ஹேண்ட்பாக்கைத் திறந்தான்.

ரயில் புறப்படுகிற நேரம் என்பதால் பிளாட்பாரத்தில் கூட்டம், பரபரப்பு அதிகமாய் இருக்க... ஹேண்ட் பேகிற்குள் கைவிட்ட மேத்தில் சைலன்சர் பொருத்தப்பட்டு தயார் நிலையில் இருந்த ரிவால்வரின் ஸேஃப்டி காட்ச்சை உள்ளேயே வைத்து விடுவித்தான.

ஹேண்ட்பேகை தலைகீழாக, அதையே மறைவாகப் பிடித்து, ரிவால்வரின் மூக்கை மட்டும் வெளியே நீட்டி துல்லியமாக லீலாவின் திசையில் திருப்பினான். ட்ரிக்கரில் விரல் வைத்தான்.

ரயில் புறப்பட்டுச் செல்லட்டும் என்று மதனும்,கிஷோரும் காத்திருந்தார்கள். லீலாவின் இரண்டு கைகளையும் ஆளுக்கு ஒன்றாக இறுக்கமாகப் பிடித்திருந்தார்கள்.

திடீரென்று, "அம்மா" என்று அலறினாள் லீலா. முதுகில் ரத்தப் பொத்தல்! முன்புறம் சாய்ந்தாள். விழுந்தாள்.

இருவரும் திகைத்து குண்டு வந்த திசையில் பார்க்க... மக்கள் கூட்டத்தில் நழுவிய மேத்தில் ஸ்டேஷனை விட்டு வெளியேறி வால்டாக்ஸ் ரோடில் காத்திருந்த காரை அணுகி, திறந்து, ஏறிக் கொண்டான் பரபரப்பாக.

வெங்கடேசன் காரை ஸ்டார்ட் செய்து, "என்ன, பிரச்னை இல்லையே, ரயில் புறப்பட்டுச்சா?" என்றான்.

"அய்யோ! புறப்படுங்க, சொல்றேன். இங்கேயும் வந்துட்டானுங்க. லீலாவை மடக்கிட்டாங்க பெட்டியோட எனக்கு வேற வழியே இல்லை. சுட்டுட்டேன் முதுகிலே. யாரும் கவனிக்கலை. நழுவி வந்துட்டேன்."

"அடப்பாவி! முதுகுலியா? செத்திருப்பாளா? சாகலைன்னா பிரச்னைடா."

"ரொம்ப தூரம்னு சொல்லிட முடியாது அனேகமா செத்திருப்பா"

"பெரிய வில்லங்கம் செஞ்சிட்டியே... ரிஸ்க் எடுக்காம இந்த தடவை டீலிங்கையே கேன்சல் செஞ்சிருக்கலாம்"

"ஒண்ணும் வில்லங்கம் இல்லை சார். நான் கட்டதை யாரும் பார்க்கலை. ரிவால் வரை ஹேண்ட் பேகை விட்டு வெளில எடுக்கவே இல்லை. மயிலாப்பூர்லேயே அந்த சனியன் பிடிச்ச பைக்கை விட்டுட்டேன். என்னை எப்படியும் ட்ரேஸ் பண்ணவே முடியாது." -

"முதலாளி என்ன சொல்வார்னு தெரியலை. பத்தாயிரம் தர்றேன். கொச்சின் இல்லன்னா ஹைதராபாத் போயிடறியா மேத்தில் ஒரு மாசம் கழிச்சு வா."

"சரி சார், முதலாளியைப் பார்த்துடலாம். அவ செத்துட்டா தேவலாம். பிழைச்சா பிரச்னை..."

இங்கே பிளாட்பாரத்தில் ரத்தச் சகதியில் லீலா இறந்து போய், விழிகள் நிலைக் குத்தியிருந்தன பரிதாபமாய்.

## 16

அலுவலகத்தில் டி.ஐ.ஜி. சந்திர மேனன் சுட்டு விரலை நீட்டி அசைத்து, அசைத்து கோபமாகப் பேசினார் - ஆங்கிலத்தில்

"கிஷோர், அத்தனை மக்கள் இருக்கும் ஒரு பொது இடத்தில் சுட்டுவிட்டுப் போயிருக்கிறான். கள்ள நோட்டு விவகாரத்தைத் துரத்திப் போய் கொலையில் வந்து நின்றிருக்கிறீர்கள். கடைசியில்



பிரயோஜனம் என்ன? பெரிய சைபர். இரண்டு லட்சம் மதிப்பிற்கு கள்ள நோட்டுக்கள் அடங்கிய சூட்கேஸ்தான்மிச்சம். வைத்துக் கொண்டு என்ன செய்வது? பெட்டி மாற்றினவன் பைக்கை வைத்து எதுவும் தெரிய முடியவில்லை. திருட்டு வண்டி. போலி நம்பர், பைக்கில், சூட்கேசில் கிடைத்த கைரேகைகளும் உதவி இல்லை. அவன் பழைய குற்றவாளி இல்லை. பிரமாதமாக தகவல்கள் சிந்தியிருக்கக்கூடிய லீலாவும் ஒரு வார்த்தை பேசாமல் கொல்லப்பட்டுவிட்டாள். அவள் உடைமைகளில் இருந்தும் எந்த தடயமும் இல்லை. அந்த வகையில் பார்த்தாலும் இப்போது ஒரு தகவலும் உருப்படியாய் கைவசமில்லை. என்ன செய்யப் போகிறீர்கள்? கொலைகாரனை எப்படிப் பிடிக்கப் போகிறீர்கள்? இந்த கள்ள நோட்டு காரணகர்த்தாவை எப்படிப் பிடிக்கப் போகிறீர்கள்?"

அட்டென்ஷனில் அப்படியே நின்று கொண்டிருந்த கிஷோரின் நெற்றியோர நரம்புகள் துடித்துக் கொண்டிருந்தன.

"ஸ்பீக் அப் மேன். கோட்டை விட்டு விட்டீர்களே..."

"சார், இரண்டு நாட்கள் டைம் கொடுங்கள் சார். உங்கள் அத்தனை கேள்விகளுக்கும் விடை களைத் தருகிறேன்."

"பார்க்கலாம்."

கிஷோர் அவர் அறையை விட்டு வெளியே வந்தான். காரை நோக்கிச் சென்றான் சோர்வாக. உள்ளே அமர்ந்திருந்த மதன், "என்ன அர்ச்சனை பலமா?"

"நியாயமான அர்ச்சனை. லேசா நினைச் சுட்டோம். இல்லைன்னா தாமதிச்சுட்டோம். அவனை ஹோட்டல்ல வச்சே விசாரிச்சிருக்கணும்."

"அது முடிஞ்சி போச்சி விடு."

கட்டிருக்கணும். இல்லைன்னா அவன் குருப்பைச் சேர்ந்த இன்னொரு ஆள்தான். அந்த குருப்பை பிடிச்சாகணும். பைக்காரன் அடையாளங்கள் நமக்குத்தெரியும். கைரேகைகள் தெரியும். இதை வச்சி அவனை பிடிக்கணும். அவனை வச்சி டோட்டல் கும்பலையும் பிடிக்கணும்."

"அவனைப் பத்தி இன்னொரு தகவலும் தெரியும் நமக்கு"

"என்னது?"

"அவன் சுதாங்கிற பொண்ணை காதலிக்கிறவன்."

"ஊர்ல எத்தனையோ ஆயிரம் சுதாக்கள்! மதன், அவன் பைல்ல நான் படிச்சிப் பார்த்த லவ் லெட்டரை அப்படியே சொன்னேனே, நீ கூட எழுதினியே, வெச்சிருக்கியா அதை?"

"இருக்குமே..."

காரின் பின் சீட்டில் இருந்த பிரீஃப்கேஸ் எடுத்துத் திறந்து மேல் ஃப்ளாப்பில் செருகி வைத்திருந்த காகிதத்தை எடுத்தான்.

"படி அதை சத்தமா"

மதன் அதை படித்தான்.

படித்து முடித்ததும் விசில் அடித்தான் கிஷோர்.

"மதன் இந்த லெட்டருக்குள்ளே எவ்வளவு செய்திகள் இருக்கு, பாரு. நான் சொல்றேன். சரியான்னு பாரு. சுதாங்கிறவ ஒரு டீச்சர். பிரம்பு தூக்கறதால அவ ஒரு ஸ்கூல் டீச்சர். ஒரு லேடீஸ் ஹாஸ்டல்ல தங்கியிருக்கா. அவ தங்கி இருக்கிற ஹாஸ்டலோட வார்டன் குண்டா இருப்பாங்க. கரெக்ட்?"

"செண்ட் பெர்ஸண்ட்."



"எடு காரை கன்னுக்குட்டியை இழுத்துக் கிட்டுப்போனா, தாய்ப்பசு பின்னாடியே வரும் தானா. அது மாதிரி சுதாவை முதல்ல கண்டு பிடிக்கலாம். அவளை வச்சி அவனை பிடிச்சிட முடியும்."

காரை ஸ்டார்ட் செய்தான் மதன்.

"எங்கே போகட்டும்?"

"சைதாப்பேட்டையில் ஒரு லேடீஸ் ஹாஸ்டல் எனக்குத்தெரியும். முதல்ல அங்கே போகலாம். சிட்டில எவ்வளவு ஹாஸ்டல்ஸ் இருக்குன்னு அங்கே விசாரிக்கலாம்.

கார் சைதாப்பேட்டைக்கு விரைந்தது. கிஷோர் வழி சொல்ல, ஓட்டி, அந்த பாரதி மகளிர் விடுதி முன்னால் நிறுத்தினான் மதன். காம்பௌண்ட் ஓரமாக வரிசையாக நெட்டிலிங்க மரங்கள். கேட்டில் வாட்ச்மேன் பாக்கெட் டிரான்சிஸ்டரில் பாட்டு கேட்டுக் கொண்டிருந்தான்.

வார்டனைப் பார்க்க வேண்டும் என்று அனுமதி பெற்று உள்ளே வந்தார்கள். வார்டன் ஒல்லியாக இருந்தார். கிஷோரைப் பார்த்து சிநேகமாகப் புன்னகைத்தான்.

"மேடம், சௌக்யமா? சிட்டில விமன்'ஸ் ஹாஸ்டல்ஸ், குறிப்பா வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல்ஸ் எவ்வளவு இருக்குன்னு தெரியணும்" என்றான் கிஷோர்.

"அதிலே எந்த ஹாஸ்டல்ல வார்டன் குண்டுன்னும் தெரியணும்." என்றான் மதன்.

"எனக்குத் தெரிஞ்சதைச் சொல்றேன்."

சொல்லச் சொல்லக் குறித்துக் கொண்டார்கள்.

புறப்பட்டார்கள்.

மாலை ஆறு வரை ஐந்து விடுதிகள் சென்று திரும்பியிருந்தார்கள். ஐந்தில் ஒன்றில் தான் வார்டன் குண்டு. ஆனால் அங்கே சுதா என்று டீச்சர் யாருமில்லை.

ஏழு மணிக்கு மந்தைவெளியில் ஒரு விடுதிக்கு வந்தார்கள். அந்த வார்டன் ஊரில் இல்லை. உதவியாளினி தான் இருந்தாள்.

"சதான்னு ஸ்கூல் டீச்சர்..."

"ஆமாம், இங்கே தான் தங்கி இருக்காங்க."

"வாரே வா! ப்ளீஸ்... அவங்களை உடனே பார்க்கணும். கூப்புடுங்க."

"அடடே! அவ சொந்த ஊருக்கு இப்ப தான் ஒரு மணி நேரம் முன்னாடி புறப்பட்டாங்க. திருவள்ளுவர் பஸ் ஸ்டாண்ட் போனாங்க."

"எந்த ஊர் அவங்களுக்கு?"

"விழுப்புரம்."

"நீங்க தயவு செஞ்சி எங்களோட வரணும். பஸ் ஸ்டாண்ட்லே சதாவை அடையாளம் காட்டணும். திரும்ப கொண்டாந்து விட்டுடறோம். விழுப்புரம் அட்ரஸ் வேணும்."

"லெட்ஜர் பார்த்துச் சொல்ல குறித்துக் கொண்டார்கள்.

புறப்பட்டார்கள், அந்தப் பொண் - மாலினி என்று பெயர் சொன்னாள் - மாலினியையும் அழைத்துக் கொண்டு.

மதன் காரை உச்ச வேகத்தில் விரட்டினான்.

திருவள்ளுவர் பஸ் ஸ்டாண்ட் வந்தார்கள்.

விழுப்புரம் செல்லும் பஸ்களாகத் தேடினார்கள். அவளா, அவளா என்று மாலினியை துளைத்தெடுத் தார்கள் அவள் வழியில்சொன்ன அடையாளங்களை வைத்துக் கொண்டு.

மாலினி உதடுகளைப் பிதுக்கினாள். அரை மணி நேரம் தேடினார்கள்.

"அவ ஹாஸ்டல்ல புறப்பட்ட நேரத்துக்கு பஸ் ஏறியிருக்கணும். நிறைய பஸ் இருக்கே விழுப் புரத்துக்கு"



மாலினியை மறுபடி கொண்டு வந்து விடுதியில் விட்டுவிட்டுப் புறப்படும் சமயம் கிஷோர் கேட்டான். "என் மதன், இங்கே சதா தன் ரூம்ல வச்சிருக்கிற பொருள்களிலே ஏதாச்சும் அவளைப் பத்தி தகவல் சொல்லலாம் நாம விழுப்புரம் போக வேண்டிய அவசியமே இல்லாமக்கூடப் போகலாம்."

"ஆமாம், மிஸ் மாலினி, சதா ஒருத்தனை காதலிச்சது தெரியுமா?"

"அட! சதாவா! அந்த அப்பாவியா? நம்பவே முடியலையே..."

"சரி, சதா தங்கி இருக்கிற தனி ரூமா?"

"இல்லை நாலு பேர் உள்ள ரூம்."

"அந்த ரூமுக்குப் போகலாமா?"

"வாங்க"

வந்தார்கள். சதாவைத் தவிர மற்ற மூன்று பெண்களில் ஒருத்தி அயர்ன் செய்து கொண்டிருந் தாள். ஒருத்தி நாவல் படித்துக் கொண்டிருந்தாள். மூன்றாமவள் யோசித்து யோசித்து ஒரு பத்திரிகை யின் குறுக்கெழுத் போட்டியில் பூர்த்தி செய்து கொண்டிருந்தாள்.

"சதாவின் காதல் பற்றித் தெரியுமா?" என்கிற கேள்விக்கு மூன்று பேருமே ஆச்சரியப்பட்டார்கள். எங்களிடம் அவள் சொன்னதே இல்லை என்று கற்பூரம் அணைக்காமல் சத்தியம் செய்தார்கள்.

"ஒக்கே சதாவோட பொருள்கள் எதெது?"

"இந்த ஷெல்புல ரெண்டாவது தட்டு அவளுது அந்த பெரிய சூட்கேஸ் அவளுது அவ்வளவுதான்."

இரண்டாவது தட்டில் பாட சம்மந்தப பட்ட புத்தகங்கள அதிகம் இருந்தன. மதன் அதை ஆராய, கிஷோர் அந்த பெரிய சூட்கேஸைத் திறந்து உள்ளே சதாவின் புடவைகளை ஒவ்வொன்றாக உதறிப் பார்த்தான். பெட்டியின் அடியில் விரித்த நியூஸ்

பேப்பர் இருந்தது. நியூஸ் பேப்பருக்கு அடியில் அவளுக்கு வந்த கடிதங்கள் ஏழெட்டு.

எடுத்துப் பார்க்க... இரண்டு விழுப்புரத்திலிருந்து வந்தவை. மீதி எல்லாம் அனுப்புபவர் விலாசம் இல்லாமல் இருந்தது. உள்ளே பிரித்துப் பார்க்க... காதல் கடிதங்கள்! எல்லாவற்றிலும் கையெழுத்து போடுமிடத்தில் 'உன் பிரியத்துக்குரியவன்' என்றே இருந்தன.

"மதன், இங்கே பார், பாடம் செய்யப்பட்ட மஞ்சள் ரோஜாக்கள்"

"கிஷோர், இங்கே கொஞ்சம்-லவ்லெட்டர்ஸ்"

மதன் அந்த நோட்டுப் புத்தகத்தை விரித்துக் காட்டினான். காய்ந்து பாடமாகியிருந்த ஏழெட்டு மஞ்சள் ரோஜாக்கள்!

கடிதங்களை படித்தார்கள் பொறுமையாக. அவனைப் பற்றி எதுவும் குறிப்பு கிடைக்கவில்லை. சுதாவின் அழகை, நேற்று தந்த முதல் முத்தத்தை, சேர்ந்து சினிமா பார்த்த அனுபவத்தை ரசித்து உருகி எழுதப் பட்டிருந்தன.

"இந்த ஒரு வரியிலே மட்டும் செய்தி இருக்கு" என்றான் கிஷோர்.

மதன் அவன் காட்டின வரியைப் படித்துப் பார்த்தான்.

"சுதா, உனக்கு மஞ்சள் ரோஜா பிடிக்கும் என்று முன்பே தெரியாமல் போனதே. கவலையே வேண்டாம், நான் வேலை பார்க்கு இடத்தில் நிறைய மஞ்சள் ரோஜாக்கள் உண்டு. இனி ஒவ்வொரு தடவை உனக்குக் கடிதம் எழுதும் போதும் ஒரு மஞ்சள் ரோஜா அனுப்புகிறேன்."

"லோ... இவன் வேலை பார்க்கிற இடத்தைப் பத்தி ஒரு குறிப்பு கிடைச்சிருக்கு. மஞ்சள் ரோஜாக்கள் நிறைய பூத்திருக்கிற தோட்டம் உள்ள ஒரு இடம்."



"இந்த ஒரு குறிப்பு வெச்சிக்கிட்டு அலையறது கஷ்டம் கிஷோர்"

"வேணாம். விழுப்புரம் போய்டலாம். இன்னும் தெரிஞ்சிக்கிட்டு வந்துடலாம்."

அனைவருக்கும் நன்றி சொல்லி, அந்த கடிதங்களை மட்டும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள் இருவரும். அடுத்த பெட்ரோல் பங்கில் காரை நிறுத்தி டேங்க் நிரப்பிக் கொண்டு தாம்பரம் சாலையில் விரைந்தார்கள்.

## 17

விழுப்புரத்தை அடைந்த போது இரவு மணி பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. பெரும்பாலான கடைகள் மூடிவிட்டார்கள். ஒரு தியேட்டரில் இரண்டாம் காட்சிக்கு கூட்டம் அலை மோதியது 'சூடான பசும்பால் கிடைக்கும்' என்று ரோட்டில் வழிமறித்து போர்டு வைத்திருந்த ஒரு கடையில் பால் சாப்பிட்டு விட்டு விலாசம் காட்டி தெருவுக்கு வழி விசாரித்தார்கள். சொல்லப்பட்டார்கள்.

குறிப்பிட்ட தெருவில் கார் சற்று சிரமப்பட்டு தான் ஓடியது. காருக்கு கர்ப்பமாய் இருந்தால், தெருவில் நுழைந்த சில வினாடிகளில் கலைந்திருக்கும். தெருவிளக்குகளில் பாதிக்கு பாதி சதி செய்திருக்க... வீடுகள் பெரும்பாலானவை உறங்கியிருந்தன. சிறும்பாலானவைகளில் டெலிவிஷன் சத்தம் கேட்டது.

கதவிலக்கம் பார்த்து அந்த ஓட்டு வீட்டுமுன் நிறுத்தினார்கள்.

உள்ளே விளக்கெரிந்து, பேச்சுக் குரல்கள் கேட்டன.

கதவு தட்டினார்கள். திறந்த பெரியவர் சட்டை போடவில்லை. வேட்டி மட்டும் கட்டியிருந்தார்.

உள்ளே ஓரமாக வைக்கப்பட்ட லெதர் பேக் அருகில் சதா தன் அம்மாவிடம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள்.

"மிஸ் சதாவைப் பார்க்கணும். மெட்ராஸ்லேர்ந்து வர்றோம்."

"அவ இப்பதான் மெட்ராஸ்லேர்ந்து வந்தா. நீங்க யாரு? என்ன விசாரிக்கணும்?"

"உள்ளே வந்து சொல்றோம்."

உள்ளே வந்து, கொண்டு வரப்பட்ட ஸ்டூல்களில் அமர்ந்து, சதாவையும், அவள் அப்பாவையும் அமரச் சொல்லி, நிதானமாக ஆரம்பித்தான் கிஷோர்.

"சி.பி.ஐ.ன்னா உங்களுக்குப் புரியுமான்னு தெரியலை நாங்க ஒரு கொலை சம்மந்தமா ஒரு ரவுடிக் கும்பலை தேடிக்கிட்டிருக்கோம். இதிலே சம்மந்தப்பட்ட ஒருத்தனை உங்க பொண்ணு சதா லவ் பண்றாங்க."

"என்னது?" என்று எழுந்தே விட்டார் அப்பா, "இருக்காது. என் பொண்ணு அப்படிப்பட்டவ இல்லை."

"அதை அவங்க சொல்லட்டும்."

சதா நிமிர்ந்து, "நான் லவ் பண்றது உண்மை. ஆனா ரவுடி கும்பலுக்கும் அவருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. அவர் நல்லவர்."

"எல்லா காதலர்களும் ஏற்படுத்தற இமேஜ் தான் இது. சொல்லுங்க, பேர் என்ன?"

"மேத்தில்,"

"அடிப்பாவி! என்றார்கள் அப்பாவும், அம்மாவும்."

"இருங்க, நாங்க விசாரிச்சுட்டுப் போனப்புறம் உங்க பிரச்சனையை வெச்சிக்கங்க மிஸ் சதா, நீங்க நல்லா ஏமாறப் பட்டிருக்கிங்க. மேத்தில் மஞ்சள் ரோஜா அனுப்பினானா? உருகி உருகி எழுதினானா?



டைக்குல சுத்தினானா? அவன் சுத்த அயோக்யன். ரு கள்ள நோட்டு கும்பல்ல இருக்கிறவன். ஒரு கொலையை அவன் தான் செஞ்சிருக்கணும்னு ங்க சந்தேகப்பட்டோம். வெல், அவன் நல்லவனா, கெட்டவனாங்கற ஆராய்ச்சி எங்களுக்குத் தேவை இல்லை. மேத்தில் எங்கே தங்கியிருக்கான்? எங்கே வேலை பார்க்கறான்? என்ன வேலை? இந்த தகவல்களைச் சொல்லிடுங்க. நாங்க போயடறோம்."

"மேத்தில் நுங்கம்பாக்கம் ஹைரோடுல ஜூலியட் அபார்ட்மெண்ட்ஸ்ல 7ம் நெம்பர் பிளாட்ல குடி இருக்கார். அவர் மட்டும் தான் இருக்கார். ஒரு ரகசியமான வேலை, என்ன வேலைன்னு சந்தர்ப்பம் வர்றப்போ சொல்றேன்னார்."

"நம்பினீங்க அதை?"

"போலீஸ் உத்தியோகமா இருக்கணும்னு யூகிச்சேன். நிஜமா அவர் நல்லவர் இல்லையா?"

"கள்ள நோட்டு மாத்தறவனை கொலைக்கு துணியறவனை நல்லவர்னு சொல்வீங்களா? வெல். உங்க தகவல்களுக்கு நன்றி. இது எங்க போன் நம்பர் மேத்தில் உங்களை சந்திக்க வந்தா, இந்த வீட்டை சுத்தி மஃப்டி போலீஸ் உலாவ ஸ்டேஷன்ல ஏற்பாடு செஞ்சிட்டுப் போறோம். அவங்க வந்து அறிமுகப் படுத்திக்குவாங்க. அவங்க கிட்டே உடனே சொல்லிடுங்க"

இருவரும் வெளியேற... அப்பா சதாவின் கையைப் பிடித்துக் கொண்டு, "ஏண்டி வேலைக்கு அனுப்பினா அங்கே போய் காதலா? அதுவும் கிறிஸ்டியனை? அதுவும் ஒரு மொள்ளமாறிப் பயலை?" என்று கேட்டதும், தொடர்ந்து கன்னத்தில் பளிச் என்று விழுந்த அறையின் ஓசையும் கேட்டது.

விழுப்புரம் ஸ்டேஷனில் விபரம் சொல்லிவிட்டுப் புறப்பட்டு மீண்டும் சென்னைக்கு வந்த போது இரவு மணி 1.40.

# 18

"முட்டாள்! முட்டாள்! முட்டாள்!"

என்று மூன்று முறை திட்டினார் ரத்ன பாண்டியன். "நீ திறமையா செஞ்சிடுவே, சமாளிச்சிடுவேன்னு நினைச்சி நான் வெளியூர் போய்ட்டு வந்தது தப்பாப் போச்சி. ஒரு நாள்ல எவ்வளவு வேலைகள் பண்ணி வெச்சிருக்கே பாவம் அவனை காவு கொடுக்க வேண்டியதாப் போச்சி."

தலை குனிந்து நின்றான் வெங்கடேசன்.

"எங்கே அவன் மேத்திவ்?"

"பத்தாயிரம் கொடுத்து கொச்சின் போகச் சொல்லிட்டேன். ஒரு மாசத்துக்கு இங்கே வர வேணாம்னு சொல்லிட்டேன்."

"ஒரு புத்திசாலித்தனமான காரியம் அது! ஷேட்டுக்கு தகவல் சொன்னியா?"

"சொன்னேன் ரொம்ப வருத்தப் பட்டார்."

"பின்னே சந்தோஷமா படுவார்? சரி. மேத்திவ் எந்த வகையிலேயும் மாட்டிக்க வழியில்லையே..."

"இல்லை சார்."

"பதினஞ்சி நாளைக்கு நடவடிக்கைகள் எல்லாத்தையும் நிறுத்தி வை. மூணாவது ஷிஃப்டும் வேணாம் பிரஸ்சுக்கு, புரிஞ்சுதா எல்லாருக்கும் அலர்ட்டா இருக்கச் சொல்லி தகவல் கொடுத்துடு."

"சரி சார்" என்றான் வெங்கடேசன். ஜுலியட் அபார்ட்மெண்ட்ஸ் வந்தார்கள். ஏழாவது பிளாட் நான்காவது மாடியில் இருந்தது. எல்லா பிளாட்டுகளிலும் இருட்டு. இரவு விளக்கின் வெளிச்சங்கள் மட்டுமே.

கிஷோரும், மதனும் படிகள் ஏறி நான்காவது மாடி வந்தார்கள். கதவில் ஆட்டோமேடிக் லாக்



பொருத்தப்பட்டிருந்ததால், வெளிப்புறமாக பூட்டப் பட்டுள்ளதா, உள்புறமாக பூட்டப் பட்டுள்ளதா என்பது புரியவில்லை.

மதன் தனது மாஸ்டர் கீ பன்ச் எடுத்தான்.

சற்று சிரமம் கொடுத்தது பூட்டு. கிஷோர் முயன்று பதினைந்து நிமிடங்களாயிற்று திறக்க!... உள்ளே வந்தார்கள் ஜாக்கிரதையாக தங்கள் ரிவால்வர்களைக் கையில் எடுத்துக் கொண்டு ஹாலில் பிரவேசித்து, சுவிட்ச் போர்டு தேடி... எல்லா விளக்குகளையும் போட்டார்கள்.

ஹால், பெட்ரூம், கிச்சன் எங்கும் எவரும் இல்லை.

இரண்டு பேரும் ஆராய்ச்சியில் இறங்கினார்கள். காலை நாலரை மணி வரை அந்த பிளாட் முழுக்க இன்ச் பை இன்ச்சாக அலசிப் பார்த்ததில்...

கிடைத்தது ஒரு அட்டகாசமான தகவல்!

ஒரு சின்ன புத்தகம். டெலிபோன் நம்பர்கள் அடங்கிய புத்தகம். அதில் மொத்தம் எட்டு எண்கள் ஒவ்வொரு எண்ணுக்கும் முன்னால் ட.க., எ.த., ச.மி., ம.ள., என்று இனிஷியல்கள்!

அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

மறுநாள்.

அந்த எட்டு விலாசமாய் நேரில் சென்று அது என்ன வீடா, தொழிற்கூடமா அலுவலகமா என்று நோட்டம் பார்த்தார்கள்.

நந்தனத்தில் ஒரு பங்களா விலாசத்திற்கு வந்த போது...

"ஹேய் லுக் மதன்" என்று பங்களாவின் சைடு பகுதியில் இருந்த தோட்டத்தைச் சுட்டிக் காட்டினான் கிஷோர்.

அங்கே ஏராளமாய் ரோஜா செடிகள்! பெரும்பாலும் மஞ்சள் ரோஜாக்கள்!

"லோ, மெத்தில் இங்கே வேலை பார்த்திருக்கலாம்."

"இது யார் வீடு?"

"ரத்ன பாண்டியன்னு பேர். பல தொழில்கள். முக்கியமா டீ எக்ஸ்போர்ட்."

"விசாரிச்சட வேண்டியதுதான்"

அன்றிலிருந்து ரத்ன பாண்டியன் மிக தீவிரமாக கண்காணிக்கப்பட்டார். அவருக்கு என்னென்ன தொழில்கள் என்று விசாரிக்கப் பட்டன. அவர் நிறுவனத்துக்கு தொடர்புடைய பேங்குகளில் விசாரித்தபோது... ஒரு தகவல்!

"அவர் வொய்ஃப் பேரு நிர்மலா சார். அவங்க பேர்ல ஃபோர் கலர் ஆப்செட் மெஷின் வாங்க லோன் கொடுத்திருக்கோம்."

ஆஃப்செட் பிரஸ்!

"மை குட்னெஸ் பிரஸ் எங்கே இருக்கு?"

"ராயப்பேட்டையிலே. நிர்மல் ஆஃப் செட் பிரஸ்ன்னு பேரு."

"போதும். இது போதும்."

தகவல்களை உயர் அதிகாரிகளிடம் கொட்டினார்கள் கிஷோரும், மதனும். அனைவருமாக கலந்தாலோசித்தார்கள். மாஸ்ரைய்ட் என்று தீர்மானித்தார்கள்.

ஒரே நேரத்தில் ரத்ன பாண்டியனின் அத்தனை நிறுவனங்களிலும் நூற்றி எண்பது ஆபீஸர்கள் சோதனை நடத்தப் புறப்பட்டார்கள்.

நிர்மல் ஆஃப்செட் பிரஸ்சில் கிஷோரும் மதனும் மற்றும் பலரும் நுழைந்தார்கள். சினிமா போஸ்டர்கள், மாத இதழ் அட்டைகள் என்று



அடித்துக் குவிக்கப் பட்டிருந்த பிரஸ் முழுவதும் அலசி... அதன் அலுவலகத்தின் ரகசிய லாக்கர்களைக் கண்டு பிடித்தார்கள். சாவி இல்லை என மேனேஜர் சொல்ல... உடைத்துத் திறக்க. உள்ளே...

பத்து ரூபாய், இருபது ரூபாய், ஐம்பது ரூபாய், நூறு ரூபாய் என்று அடுக்க ஆறுவண்ணங்களில் நிறம் பிரிக்கப்பட்ட நெகடிவ்கள், பிரத்யோகமான வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட இங்குகள் கைப்பற்றப் பட்டன.

ரத்ன பாண்டியன் வீட்டில் பாத்ரூமுக்குள் ஒரு ரகசிய சுவர் அலமாரிக்குள் இருந்து கட்டுக் கட்டாக கள்ள நோட்டுகளும் நல்ல நோட்டுகளும் எடுக்கப் பட்டன.

ரத்ன பாண்டியன் கைது செய்யப் பட்டார். மேலும் பதினொன்று தொழிலாளர்களும் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் அவர் கலவரப்படவில்லை.

தன் மனைவியையும், மகளையும் பார்த்து சொன்னார் சிரித்துக் கொண்டே—

"கவலையே படாதிங்க. பதினைஞ்சே நாள்ல இந்த கேஸ் எதுவுமே என்னை ஒண்ணும் செய்யாதபடி பார்த்துடுவேன் தைரியமா இருங்க."

"பார்க்கலாம் சார் அதையும்" என்றான் கைது செய்த கிஷோர்.

## 19

டெல்லியில் தன் காதலியைப் பார்த்துவிட்டு ஊர் திரும்பி பார்த்தசாரதிக்கு பணத்தின் மேல் வெறி இன்னும் அதிகரித்தது.

போதைப் பொருள் கடத்தியவன் தங்கம், வைரம் கடத்தினான்.

தொழில்களை விருத்தி செய்தான்.

சாமிக்கண்ணுவின் மகளையே திருமணம் செய்து கொண்டான்.

ஒவ்வொரு தப்பாக செய்து பார்த்து... கடைசியில் தன் கூட்டாளிகள் சிலருடன் சேர்ந்து கள்ள நோட்டு அடிக்கிறதிலும் இறங்கிப் பார்த்தான். ஒவ்வொன்றிலும் சாமர்த்தியமாகத் தப்பி வந்த பார்த்தசாரதி...

இதில் கடைசியாக வசமாக மாட்டிக் கொண்டான்.

-இதுவே ஜெயிலில் நான் சந்தித்த அந்த கள்ள நோட்டு மன்னனின் முன் கதையாகும். பெயர்கள் மட்டும் மாற்றப் பட்டுள்ளன. அடுத்த இதழில் எழு கொலைகளைச் செய்த குற்றவாளியின் கதையைப் பார்ப்போம்.